

PUBLIC UTILITIES COMMISSION OF SRI LANKA

வருடாந்த அறிக்கை - 2020

வருடாந்த அறிக்கை
ஆண்டு 2020

இலங்கைப் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு

6ஆவது மாடி, இலங்கை வங்கி வர்த்தகக் கோபுரம்,
இலக்கம் 28, புனித மைக்கல் வீதி,
கொழும்பு - 03
தொலைபேசி:+94112392607 பெக்ஸ்:+94112392641
மின்னஞ்சல்:info@pucsl.gov.lk இணையத்தளம்:www.pucsl.gov.lk



எமது தூரநோக்கு

இலங்கையில் வசிக்கின்ற அனைத்து மக்களுக்கும் மற்றும் இலங்கையின் அபிவிருத்திற்கு பங்களிக்கின்ற நபர்களுக்கும் உகந்த ஒரு சூழலை உருவாக்குதல், மற்றும் நாட்டின் நிலையான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரலின் வரையறைகளினுள் பொருளாதார ரீதியில் மிகவும் பயனுள்ள விதத்தில் அத்தியாவசிய உட்கட்டமைப்பு வசதிகளுக்கும் மற்றும் பொது வசதிகளுக்குமான அணுகுபிரவேசத்தை ஏற்படுத்தல்.

எமது செயற்பணி

ஏற்கெனவேயிருக்கின்ற நுகர்வோருக்கும் மற்றும் எதிர்கார நுகர்வோருக்கும் மிகவும் சமத்துவமாகவும் மற்றும் நிலைபெறுதகு விதத்திலும் பாதுகாப்பானதும், நம்பத்தகுந்ததும் மற்றும் நியாயமானதுமான விலை மைய உட்கட்டமைப்பு வசதிகளை உறுதிப்படுத்தும் முகமாக இலங்கைப் பொதுப்

இலங்கைப் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவாகிய நாம், ஒரு செழிப்பான தேசத்தின் கனவுகளை வலுப்படுத்த முயற்சிக்கின்றோம். மேலும் மக்கள் ஒளிமயமான எதிர்காலத்தின் பார்வையை நோக்கிய எல்லைகளைத் தாண்டிச் செல்வதற்கும், தேசிய நோக்கத்திற்கான அர்ப்பணிப்புடன் எல்லைகளைத் தாண்டிச் செல்வதற்கும் எதிர்பார்க்கின்றனர். ஆகையால் பொது மக்களின் பங்கேற்புடன் கொள்கை மாற்றங்களை எளிதாக்கி அதன் மூலமாக மின்சாரம், நீர் ஆகிய சேவைகளையும் மற்றும் பெற்றோலியக் கைத்தொழில்களையும் மேம்படுத்துவதை நாம் இலக்காகக் கொண்டுள்ளோம்.

உள்ளடக்கம்

	Page
1. தலைவரின் செய்தி	09
2. பணிப்பாளர் நாயகத்தின் செய்தி	10
3. இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு பற்றி	11
5. ஆணைக்குழுவின் உறுப்பினர்கள்	12
6. இ.பொ.ப.ஆ. தொழிற்பாடுகள்	13
7. நீண்டகால இலக்குகள்	14
9. நாம் 2020ஆம் ஆண்டில் அடைந்த சாதனைகள்	15
10. மின்சாரத்துறை	17
11. பெற்றோலியத்துறை	27
12. நீர் சேவைத்துறை	31
13. அக்கறையுடைய தரப்புகளுடன் இணைந்து தொழிற்படுதல்	35
14. இ.பொ.ப.ஆ. அதன் பதவியணி	39
16. இ.பொ.ப.ஆ.இன் 2021ஆம் ஆண்டிற்கான செயல்திட்டம்	43
17. 2020 டிசம்பர் 31ஆம் திகதிக்கு முடிவடைந்த ஆண்டிற்கான கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை	51
18. 2020ஆம் ஆண்டிற்கான இ.பொ.ப.ஆ.-இன் நிதி அறிக்கை	59
19. கணக்காய்வு குழு அறிக்கை	81

தலைவரின் செய்தி



குறிப்பாக இலங்கை துரித பொருளாதார வளர்ச்சிக்காகவும் மற்றும் மின்சார கைத்தொழிலுக்காவும் தன்னை தயார்படுத்தியிருப்பதானது, இலங்கை மின்சார சபை மூலமான ஆண்டு திட்டங்களை நன்கு விவரித்துள்ள ஒரு முதலீட்டு திட்டப்பிரேரணையாக காணப்படுகின்றது. குறித்த கைத்தொழிலும் நம்பத்தகுந்த ஒழுங்குறுத்துகை வேலைச்சட்டகத்தின் மூலம் நன்கு உத்தரவாதம் பெற்றுள்ளது.

கொவிட் 19 தொற்றுநோய் நாட்டை கடுமையாக பாதித்ததால் 2020 ஆம் ஆண்டு இலங்கைக்கு மிகவும் சவால்கள் நிறைந்த ஒரு ஆண்டாக மாறியிருந்தது. அக்கறையுடைய தரப்புகளுக்கு புதிய முறைகளை உருவாக்கி கொடுக்கும் நோக்கில், சகல அக்கறையுடைய தரப்புகளையும் ஈடுபடுத்த இலங்கை பொது பயன்பாட்டு ஆணைக்குழுவுக்கு உச்சளவான வாய்ப்பு கிடைத்த ஆண்டாகவும் இந்த ஆண்டு விளங்கியது.

நாடு முடக்கப்பட்டிருந்த வேளையில் வீட்டு மின்சார பிரச்சினைகளை தீர்க்கும் வகையில், இலங்கை மின்சார சபையின் ஊழியர்களையும், இலங்கை பொலிஸ் திணைக்களத்தின் ஊழியர்களையும் மற்றும் மின்சார கைத்தொழிலில் ஈடுபடுகின்ற ஏனைய தரப்புகளையும் ஈடுபடுத்தி இலங்கைப் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவினால் ஒரு அவசர சேவையை ஆரம்பிக்க முடிந்தது. சகல அக்கறையுடைய தரப்புகளையும் ஈடுபடுத்தி வீடுகளின் குழாய்மார்க்கம் சம்பந்தமான பிரச்சினைகளை தீர்ப்பதற்கும் எம்மால் அதே சேவை மேற்கொள்ளப்பட்டது.

கொவிட் தொற்றுநோய் காரணமாக, வாடிக்கையாளர்கள் அலுவலகத்திற்கு சமூகமளிக்கக் கூடாது என அறிவுறுத்தப்பட்டிருந்ததால் மின்சார நுகர்வோரின் பிரச்சினைகளை தீர்க்கும் செயல்முறை ஒரு பெரும் திருப்புமுனையை அடைந்தது. ஆகையால், முறைப்பாடுகளை செய்வதற்கும் மற்றும் அக்கறையுடைய தரப்பு விடயங்களில் அலுவலர்களின் உதவியை பெறுவதற்கும் என எம்மால் ஹொட்லைன், ஒன்லைன் மற்றும் சமூக ஊடகம் முதலிய வசதிகளை ஏற்படுத்தி கொடுக்க முடிந்தது.

மின்னியலாளர்கள் அவர்களின் தொழிலில் முன்னேறுவதற்கும் மற்றும் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்திற் கொள்வதற்கும் உதவுவதற்கான மின்னியலாளர்களின் தேசிய வேலைச்சட்டகத்தின் செயற்படுத்துகைக்கு ஆதரவளிக்கும் பொருட்டு நாம் மாவட்ட ரீதியில், பல மின்னியலாளர் விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்களையும் நடத்தினாம். இலங்கையில் சுமார் 80,000 எண்ணிக்கைக்கும் அதிகமான மின்னியலாளர்கள் காணப்படுகின்றனர். ஆயினும், இவர்களில் ஒரு சிலருக்கு மாத்திரமே உரிய தொழில் தகைமைகள் இருக்கின்றன.

நீர் சார்ந்த சேவைகள் கைத்தொழிலுக்கு என பெயர்குறிக்கப்பட்டுள்ள ஒழுங்குறுத்தும் அதிகார தரப்பு மற்றும் நீர் விநியோக அமைச்சுக்கு ஆலோசனைகளை வழங்கும் ஆற்றல் வாய்ந்த நிறுவனம் என்ற வகையில், இலங்கைப் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு, நாட்டிற்கு குடிநீர் பற்றிய தேசிய கொள்கையை தயாரிப்பதில் உதவும் பொருட்டு, மின்சார நுகர்வோர் எதிர்கொள்கின்ற குடிநீர் சம்பந்தமான பிரச்சினைகளை இனங்காணும் முகமாகவும் வடமேல் மாகாணம், கிழக்கு மாகாணம் மற்றும் தென் மாகாணம் ஆகிய மாகாணங்களில் அக்கறையுடைய தரப்பு ஆலோசனை கேட்டறியும் கூட்டங்களை நடத்தியது. அடுத்த ஆண்டில் இலங்கையின் சகல மாகாணங்களிலும் அத்தகைய அக்கறையுடைய தரப்பு ஆலேசனை கேட்டறியும் கூட்டங்களை நடத்த நாம் திட்டமிட்டுள்ளோம்.

நுகர்வோர் விவகாரங்கள் அதிகார சபையின் உதவியுடன் இலங்கையின் உராய்வுநீக்கி எண்ணெய்கள் சந்தையில் காணப்படுகின்ற அதிகாரமளிக்கப்படாத உராய்வுநீக்கி எண்ணெய்களை திடீரென சோதனையிட்டமை நாம் மேற்கொண்டிருந்த மற்றுமொரு குறிப்பான நிகழ்வாகும்.

2020 ஆம் ஆண்டு எமக்கு சவால்கள் நிறைந்த ஒரு ஆண்டாக இருந்தாலும் கூட, இலங்கைப் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் பதவியணியினர் மிகவும் சிறந்த அறிவை பெற்று அந்த அறிவை எமது அக்கறையுடைய தரப்புகளினதும் மற்றும் நாட்டினதும் நன்மைக்காக வழங்கியமையை நான் எனது குறிப்பில் இறுதியாக பதிவது மிகவும் பொருத்தம் என நினைக்கின்றேன்.

ஜனக ரத்நாயக்க
தலைவர்

பணிப்பாளர் நாயகத்தின் செய்தி



மின்சாரக் கைத்தொழில் அபிவிருத்தியில் மின்சக்தித் துறையை ஒழுங்குறுத்தும் அதிகார நிறுவனம் என்ற வகையில் இலங்கைப் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு முதலீட்டு தரப்புகளுக்கு சந்தை பிரவேசத்தை இலகுவாக்கியமை, மின்சார பாதுகாப்பையும் மின்சார விநியோகத்தின் தரத்தையும் மேம்படுத்தியமை, மின்சாரம் தொடர்பாக மின்சார நுகர்வோரும் மற்றும் ஏனைய அக்கறையுடைய தரப்புகளும் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகளை அடையாளப்படுத்தியமை ஆகியவற்றின் ஊடாக துல்லியமான ஒரு பங்களிப்பை செய்துள்ளது.

பயனுள்ள ஒழுங்குறுத்துகை பாதுகாப்பு அம்சங்கள், பொருளாதார அம்சங்கள், மின்சாரக் கைத்தொழிலின் தொழில் நுட்ப அம்சங்கள், சேவை வழங்கும் தரப்புகளுக்கு மத்தியில் வினைத்திறனை ஊக்குவித்தல் மற்றும் நாட்டில் அபிவிருத்திற்கு பங்களிக்கின்ற ஒட்டுமொத்த குறிக்கோளுடன் நுகர்வோர் உரிமைகளை பாதுகாத்தல் என்பவற்றின் மூலம் இதனை மேலும் மேம்படுத்தலாம்.

நிறுவனசார் இலக்குகளையும் மற்றும் ஏனைய முக்கியமான தகவல் சார்ந்த இலக்குகளையும் அடைந்து கொள்ளும் பொருட்டு, இலங்கைப் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு வழங்குகின்ற சேவைகளின் கிடைப்புத்தன்மை மற்றும் தரம் ஆகியன பற்றி பொது மக்களை விழிப்பூட்டுவதிலும், எமது வெளிப்படைத்தன்மையையும் மற்றும் நம்பத்தகுதன்மையையும் மேம்படுத்துவதிலும் இலக்குக்கொள்கின்ற ஒரு மாதாந்த கண்காணிப்பு முறைமையை நாம் தாபித்துள்ளோம். பொது வசதிகளை வழங்குகின்ற தரப்புகளின் சுமுகமாக தொழிற்பாடுகளுக்கு உதவும் நோக்கில், கொவிட் தொற்றுநோய் காலத்தில், நாம் மின்சார கட்டண கொடுப்பனவுகள் தொடர்பான ஒழுங்குறுத்துகை சாதனங்களை தயாரித்து, நுகர்வோர் பிரச்சினைகளை எதிர்நோக்குகின்ற போது அத்தகைய பிரச்சினைகளை எமக்கு அறியப்படுத்தும் வகையில் அவர்களுக்கு ஒன்லைன், சமூக ஊடகம் போன்ற பல வித்தியாசமான தொடர்பாடல் வசதி முறைமைகளை ஏற்படுத்திக் கொடுத்தோம்.

ஒழுங்குறுத்துகை செயலாற்றுகையின் ஊடாக தனது மூலோபாய இலக்கை அடைந்து கொள்வதற்கும் மற்றும் மின்சார நுகர்வோர் திருப்தியை உறுதிப்படுத்துவதற்கும் இலங்கைப் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவுக்கு பொறுப்பு இருக்கின்றது. இலங்கையில் வசிக்கின்ற அனைத்து மக்களுக்கும் மற்றும் இலங்கையின் அபிவிருத்திற்கு பங்களிக்கின்ற நபர்களுக்கும் உகந்த ஒரு சூழலை உருவாக்குதல், மற்றும் நாட்டின் நிலையான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரலின் வரையறைகளினுள் பொருளாதார ரீதியில் மிகவும் பயனுள்ள விதத்தில் அத்தியாவசிய உட்கட்டமைப்பு வசதிகளுக்கும் மற்றும் பொது வசதிகளுக்குமான அணுகுபிரவேசத்தை ஏற்படுத்தல், அக்கறையுடைய சகல தரப்புகளுக்கும் சமத்துவத்தை பேணுதல், மின்சார நுகர்வோரின் உரிமைகளை பாதுகாத்தல் மற்றும் வினைத்திறன் வாய்ந்த தரமான சேவைகள் நாட்டின் நிலையான அபிவிருத்திற்கு வழங்கப்படுகின்றனவா என்பதை உறுதிப்படுத்தல் போன்ற எமது கூட்டிணைந்த தூரநோக்கு கொள்கைக் கூற்றை நிறைவேற்றுவதற்கும் எமக்கு பொறுப்பு இருக்கின்றது.

தமித குமாரசிங்க
பணிப்பாளர் நாயகம்

இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு பற்றி

இலங்கைப் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு (ஆணைக்குழு அல்லது இபொபஆ) மின்சாரக் கைத்தொழிலின் பொருளாதார, பாதுகாப்பு மற்றும் தொழில் நுட்ப ஒழுங்குறுத்துகை நிறுவனம் என்ற வகையில் தேசிய பொருளாதாரத்தில் மிகவும் இன்றியமையாத ஒரு பங்களிப்பை செய்வதுடன், உராய்வுநீக்கி எண்ணெய்கள் சந்தையின் நிழல் ஒழுங்குறுத்தும் அதிகார நிறுவனமாகவும் தொழிற்படுகின்றது.

நாம் மின்சார உற்பத்தி, மின்சார செலுத்துகை, மின்சார பகிர்ந்தளிப்பு, மின்சார விநியோகம் மற்றும் மின்சார பாவனை என்பவற்றை ஒழுங்குறுத்துகின்றோம்.

நாம் வழங்கும் முக்கியமான சேவைகளுக்கு மத்தியில், நாம் இலங்கையில் மின்சக்தித் துறை போதிய முதலீடுகளையும், அதிகளவான கிடைப்புத்தன்மையையும், வினைத்திறன் வாய்ந்த மின்சார விநியோகத்தையும் மற்றும் மின்சார நுகர்வோருக்கு மேம்படுத்திய தரமான சேவைகளையும் கொண்டுள்ளதா என்பதையும் உறுதிப்படுத்திக் கொள்கின்றோம்.

இலங்கைப் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு 2002 இன் 35 ஆம் இலக்க பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு சட்டத்தின் கீழ் பாராளுமன்றத்தினால் தாபிக்கப்பட்டு, மின்சாரம், நீர் சார்ந்த சேவை மற்றும் பெற்றோலியம் போன்ற கைத்தொழில்களை ஒழுங்குறுத்தும் பணி இலங்கைப் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவுக்கு (இபொபஆ) சாட்டப்பட்டுள்ளது.

எமது குறிக்கோள்களும் தொழிற்பாடுகளும் மற்றும் வேலைச்சட்டகமும் 2002 இன் 35 ஆம் இலக்க இலங்கைப் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு சட்டம், 2009 இன் 20 ஆம் இலக்க இலங்கை மின்சார சட்டம் மற்றும் 2013 இன் 31 ஆம் இலக்க இலங்கை மின்சார (திருத்தல்) சட்டம் ஆகிய சட்டங்களின் கீழ் விவரிக்கப்பட்டுள்ளன.

நீர் சாந்த சேவைகளையும் மற்றும் பெற்றோலியக் கைத்தொழில்களையும் ஒழுங்குறுத்துவதற்கான உரிய சட்டம் பாராளுமன்றத்தின் ஊடாக நிறைவேற்றப்படவுள்ளதால் நாம் ஒழுங்குறுத்துகை சார்ந்த சேவைகளை வழங்கி நீர் சார்ந்த சேவைகள் மற்றும் பெற்றோலிய கைத்தொழில்கள் ஆகியவற்றுடன் நெருங்கி தொழிற்படுகின்றோம்.

நாம், இபொபஆ முதலாவது ஆணையாளர்கள் குழுவும் அதன் பணிப்பாளர் நாயகமும் நியமிக்கப்பட்டிருந்த போது 2003 ஆம் ஆண்டில் இயங்க தொடங்கினோம். ஒரு ஐந்து ஆண்டு காலப் பகுதிற்கு, அரசியலமைப்பு பேரவையின் இணக்கத்துடன் கொள்கை அபிவிருத்தி விடயத்திற்கு பொறுப்பாகவுள்ள அமைச்சரினால் ஐந்து உறுப்பினர்கள் அடங்கிய ஆணைக்குழு நியமிக்கப்பட்டுள்ளது.

கூட்டிணைந்த தகவல்கள்

ஆணைக்குழுவின் பெயர்

இலங்கைப் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு

சட்ட அந்தஸ்து

2002 இன் 35 ஆம் இலக்க இலங்கைப் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு சட்டத்தினால் தாபிக்கப்பட்டு சட்ட அந்தஸ்தைக் கொண்டுள்ளது.

ஆணைக்குழுவின் உறுப்பினர்கள்

தலைவர்

திரு.ஜனக ரத்நாயக்க

பிரதித் தலைவர்

பேராசிரியர் ஜனக ஏகநாயக்க

ஆணைக்குழுவின் உறுப்பினர்கள்

திரு.மொஹான் சமரநாயக்க
திருமதி.சதுரிக்கா விஜேசிங்க
உதெனி விக்ரமசிங்க

பணிப்பாளர் நாயகம்

திரு தமித்த குமாரசிங்க

ஆணைக்குழுவுக்கான செயலாளர்

திருமதி ஜானகி எம். விதானகே

பதிவு செய்யப்பட்டுள்ள அலுவலகம்

6-வது மாடி,
இலங்கை வங்கி வர்த்தகக் கோபுரம்,
இலக்கம் 28,
சென் மைக்கல் வீதி,
கொழும்பு 03

மின்னஞ்சல் முகவரி : info@pucsl.gov.lk
தொலைபேசி இலக்கம் : +9411 239 2607/8
தொலைநகல் இலக்கம் : +9411 239 2641
இணையத்தள முகவரி : www.pucsl.gov.lk

கணக்காய்வாளர்கள்

கணக்காய்வாளர் அதிபதியின் திணைக்களம், இலக்கம்

306/72, பொல்துவ வீதி, பத்தரமுல்ல

வங்கிகள்

இலங்கை வங்கி,
1 ஆம் மற்றும் 2 ஆம் மாடி,
இலங்கை வங்கி வர்த்தகக் கோபுரம்,
இலக்கம் 28,
சென் மைக்கல் வீதி,
கொழும்பு 03

ஆணைக்குழுவின் உறுப்பினர்கள்

இலங்கைப் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு



இபொபஆ குழுவின் தொழிற்பாடுகள்

2002 இன் 35 ஆம் இலக்க பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு சட்டத்தில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள இலங்கைப் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தொழிற்பாடுகள் பின்வருமாறு:

- இபொபஆ சட்டத்தின் கீழ் அல்லது அந்த சட்டத்தின் மூலம் அல்லது வேறு ஏதாவது கைத்தொழில் சட்டத்தின் கீழ் அல்லது அந்த சட்டத்தின் மூலம் ஆணைக்குழுவுக்கு உரித்தளிக்கப்பட்டுள்ள அல்லது சாட்டப்பட்டுள்ள அதிகாரத்தத்துவங்களின் பிரகாரம் அத்தகைய அதிகாரங்களை பிரயோகித்து கடமைகளையும் மற்றும் தொழிற்பாடுகளையும் நிறைவேற்றல்.
- ஆணைக்குழுவின் தீர்மானங்களினால் பாதிக்கப்படலாம் எனும் எவரேனும் நபருடன் அல்லது குழுவினருடன் அல்லது அத்தகைய குழுக்களுடன் பொருத்தம் என ஆணைக்குழு கருதும் அளவுக்கு கலந்தாலோசித்தல்.
- இபொபஆ சட்டத்தின் செயல்நோக்கினுள் வருகின்ற ஏதாவது ஒரு கைத்தொழில் சம்பந்தமான சகல விடயங்களிலும், ஆணைக்குழு கருதுகின்றவாறு அரசாங்கத்திற்கு ஆலோசனை வழங்கல்.
- இபொபஆ சட்டத்தின் 15(4) ஆம் பிரிவுக்கு அமைய ஏதாவது பொது வசதி கைத்தொழில்கள் தொடர்பான தகவல்களை சேகரித்தல், பதிவு செய்தல் மற்றும் பரம்பல் செய்தல்.
- தாபிப்பு பெற்று ஆறு மாதங்களுக்குள் ஆணைக்குழுவின் தொழிற்பாடுகளை ஆளுகின்ற சிறந்த ஒரு விதிக்கோவையை உள்ளடக்குகின்ற ஒரு ஒழுங்குறுத்துகை கைந்நூலை தயாரித்து, தேவையானவாறு அதனை மீளாய்வு செய்தல்.
- ஏதாவது ஒரு கைத்தொழில் சட்டத்தில் அதற்காக ஏற்பாடு செய்யப்பட்டுள்ள சகல விடயங்கள் தொடர்பாகவும் அனுமதிப் பத்திரம் வழங்கல், ஒழுங்குறுத்துகை மற்றும் சோதனையிடுகை ஆகிய தொழிற்பாடுகளை நிறைவேற்றல்.
- ஏதாவது ஒரு கைத்தொழில் சட்டத்தினது அதிகாரத்தின் கீழ் விநியோகிக்கப்படும் மின்சார அனுமதிப் பத்திரங்கள், செய்து கொள்ளப்படும் ஒப்பந்தங்கள் மற்றும் ஏனைய சட்டஆவணங்கள் என்பவற்றின் ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்தல்.
- ஏதாவது ஒரு கைத்தொழில் சட்டத்தினால் தேவைப்படுத்தப்படுமிடத்து நிறுவனங்களினால் ஒழுங்குறுத்தப்படும் கட்டணங்களையும் மற்றும் விதிக்கப்படும் ஏனைய கட்டணங்களையும் ஒழுங்குறுத்துதல்.
- ஏதாவது பொது வசதிகள் கைத்தொழிலில் எழுகின்ற பிணக்குகளை நடுத்தீர்ப்புகளின் மூலம் நிர்ணயித்து அவற்றுக்கான தீர்வுகளை பெற்றுக் கொடுத்தல்.
- பொது வசதிகள் கைத்தொழில்களின் பாதுகாப்பு, தரம், தொடர்ந்திருக்கும் தன்மை மற்றும் நம்பத்தகு தன்மை என்பன தொடர்பான தொழில் நுட்ப நியமங்களையும் மற்றும் ஏனைய நியமங்களையும் தயாரித்து நடைமுறைப்படுத்தல்.
- ஆணைக்குழு தனது தொழிற்பாடுகளை நிறைவேற்றுவதற்கு பயனுள்ளதும் பொருத்தமானதும் என கருதும் அத்தகைய இடைநேர் செயற்பாடுகளை அல்லது இணைந்த செயற்பாடுகளை மேற்கொண்டு நிறைவேற்றல்.

நீண்டகால இலக்குகள்

மின்சக்தியின் தரம்

இலக்கு 1: மின்சார நுகர்வோருக்கான மின்சார விநியோகங்கள் நியதிச்சட்டமுறை அளவுகளை அனுசரிக்க செய்தல் - வொல்ட் 230 V ± 6% மற்றும் அலைவரிசை மற்றும் ஒருங்கிசைவுகளுக்கு 50 Hz ± 0.5%

மின்சார விநியோகத்தின் தரம்

இலக்கு 2: சராசரி மின்சார முறைமை மின்சார தடங்கல் கால சுட்டியை ஆண்டு ஒன்றுக்கு மின்சார நுகர்பவர் ஒருவருக்கு 24 மணித்தியாலங்களுக்கு குறைத்தல்

இலக்கு 3: ஒரு வருடத்திற்குள் நுகர்வோர் அனுபவிக்கும் மின்சாரத் தடைகளின் மொத்த எண்ணிக்கையை 30 வரை குறைவடைய செய்தல் (சராசரி அடிப்படையில்)

இலக்கு 4: நுகர்வோர் சேவை மார்க்க முறிவுக்கான சராசரி மீள்தாபிப்பு நேரத்தை ஒரு நுகர்வோருக்கு 2 மணிநேரத்திற்கு குறைவடைய செய்தல்

சேவையின் தரம்

இலக்கு 5: நுகர்வோர் உரிமைகள் மற்றும் கடமைகள் பற்றிய தகவல்களை முன்கூட்டியும் மற்றும் அவர்களுக்கு தேவைப்படும் போதும் கிடைக்க செய்தல்

இலக்கு 6: நுகர்வோர் விசாரணைகளுக்கு.்.கோரிக்கைகளுக்கு.்.முறைப்பாடுகளுக்கு வசதியளிக்க ஒரு மின்சார சேவை வழங்கும் தரப்பு எடுக்கும் காலத்தை 30 நாட்களுக்கு குறைத்தல்

இலக்கு 7: நுகர்வோருக்கு சேவை செய்ய இபொபஆ எடுக்கும் சராசரி காலத்தை 30 நாட்களுக்கு குறைத்தல்

மின்சார கட்டணமும் மற்றும் சேவை கட்டணங்களும்

இலக்கு 8: 2013 இல் மின்சார விநியோகத்தில் ஏற்பட்ட மொத்த செலவை 10மூ ஆல் குறைத்தல் (மொத்த செலவை உண்மையான அடிப்படையில், உற்பத்தி கலவை மற்றும் எரிபொருள் விலைகளுக்கான சீராக்கலுக்கு உட்படுத்தல்)

இலக்கு 9: 2013 இல் சேவை வழங்குநரால் விதிக்கப்படும் கட்டணங்களை நிஜ அடிப்படையில் 10மூ ஆல் குறைத்தல்

மின்சாரத்தின் பாதுகாப்பு

இலக்கு 10: மின்சார அதிர்ச்சிகளினால் உயிரிழக்கும் எண்ணிக்கையை ஆண்டு ஒன்றுக்கு 20 வரை குறைத்தல்

மின்சாரத்திற்கான கேள்வி

இலக்கு 11: நாட்டில் மின்சாரத் தேவைகள் எப்பொழுதும் பூர்த்தி செய்யப்படுவதை உறுதிசெய்வதற்காக 2020 ஆம் ஆண்டுக்குள் குறைந்தபட்சம் 10 சதவீத இருப்பு வரையறையை எப்போதும் பேணுதல்

மின்சாரத்தின் வினைத்திறன் வாய்ந்த பாவனையும் மற்றும் சேமிப்பும்

இலக்கு 12: வசதி மைய சக்தி வினைத்திறன் மற்றும் சக்தி பாதுகாப்பு நிகழ்ச்சித் திட்டங்களின் ஊடாக 2020 ஆம் ஆண்டின் மூலம் 250 GWh சக்திக் கொள்திறனையும் மற்றும் 30 மெகாவொட்டு சக்திக் கொள்திறனையும் பெற்றுக் கொடுத்தல்

நாம் 2020 ஆம் ஆண்டில் அடைந்த சாதனைகள்

2020 ஆம் ஆண்டு இலங்கைக்கு மட்டுமன்றி முழு உலக நாடுகளுக்கும் ஒரு சவாலான ஆண்டாக விளங்கியது. COVID 19 தொற்றுநோய் நிலவரம் நாம் பின்பற்றிய வாழ்க்கை முறையையும் மற்றும் தொடர்பு முறையையும் மாற்றியது. உயிர்களை காப்பதற்கும் மற்றும் பணிகளுடன் இணைந்திருப்பதற்கும் தொழில் நுட்பம் பெரும் பங்களிப்பை செய்தது.

ஒரு பல பிரிவு ஒழுங்குறுத்தும் தரப்பு என்ற ரீதியில், பல சவால்களுக்கு மத்தியிலும் 2020 ஆம் ஆண்டில் பல முக்கியமான சாதனைகளை இபொபஆ ஆல் அடைய முடிந்தது.

தனிமைப்படுத்தல் ஊடரங்கு சட்டம் அமூலிருந்த காலப் பகுதியில், தடையின்றி மின்னியலாளர்களினதும் மற்றும் குழாய் பொருத்துநர்களினதும் சேவைகளை பெறுவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டமை, மின்சார நுகர்வோரின் மின்சாரம் சம்பந்தமான பிரச்சினைகள் பற்றிய மனக்குறைகளை விசாரித்து அத்தகைய பிரச்சினைகளுக்கு தீர்வுகளை வழங்குவதற்கு ஒன்லைன் சமூக ஊடக அலைவரிசைகளை தாபித்தமை, குடி நீருக்கான சிறந்த தேசிய கொள்கையை வகுத்தமைப்பதற்கு குடி நீர் பற்றிய பிரச்சினைகளை இனங்காணும் முகமாக நீர் நுகர்வோர்களுடனும் மற்றும் அதிகாரிகளுடனும் தொடர்ச்சியாக அக்கறையுடைய தரப்பு ஆலோசனைகள் கேட்டறியும் கூட்டங்கள் நடத்தப்பட்டமை, மின்சார அனுமதிப் பத்திரம் வழங்கல், தேசிய வேலைச்சட்டகத்தின் கீழ் தொழில் தேர்ச்சி அனுமதிப் பத்திரங்களை மின்னியலார்கள் பெற்றுக் கொள்ளும் வகையில் அந்த மின்னியலாளர்கள் விழிப்பூட்டப்பட்டமை மற்றும் இலங்கையில் அனுமதி அளிக்கப்படாத தரத்தில் குறைந்த உராய்வுநீக்கி எண்ணெய்களை இனங்காணுவதற்கு சுற்றிவளைப்புகள் மேற்கொள்ளப்பட்டமை என்பவற்றை நாம் அடைந்த சில முக்கிய சாதனைகளாக குறிப்பிடலாம்.

2020 ஆம் ஆண்டிற்கான மின்சாரக் கைத்தொழில், நீர் சார்ந்த சேவைகள் கைத்தொழில் மற்றும் பெற்றோலிய கைத்தொழில் ஆகியவற்றுடன் சம்பந்தமான செயற்பாடுகளின் முன்னேற்றத்தையும், 2021 ஆம் ஆண்டிற்கான இபொபஆ இன் திட்டத்தையும் மற்றும் ஒழுங்குறுத்தும் தரப்பு என்ற ரீதியில் அதன் நிதி முன்னேற்றத்தையும் இந்த அறிக்கை உள்ளடக்குகின்றது.

மின்சாரத் துறை



பலன் 01

மின்சார நுகர்வோருக்கான மேம்பட்ட உற்பத்தித்திறனும் சௌகரிகமும்

தொடர்புடைய சட்டங்கள் மற்றும் வழிகாட்டுதல்கள் ஆகியவற்றின் பிரகாரம் நுகர்வோர் மனக்குறைகளை தீர்ப்பதற்கும் மற்றும் அனுமதிப் பத்திரம் பெற்ற தரப்புகளின் ஆலோசனைகளுக்கான கோரல்களை கையாளுவதற்கும் உதவுதல்

வருடம் 2019	வருடம் 2020
463 முறைப்பாடுகள்	700 முறைப்பாடுகள்

நுகர்வோர் முறைப்பாடுகளையும் மற்றும் மனக்குறைகளையும் கையாளுவதும் மற்றும் வசதி செய்வதும் இலங்கைப் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் வேலை நிகழ்ச்சி நிரலில் முக்கிய பங்கை வகிக்கிறது. 2020 ஆம் ஆண்டில், முன்னைய ஆண்டுகளை விடவும் மின்சார நுகர்வோரிடமிருந்தும் மற்றும் மின்சார விநியோக அனுமதிப் பத்திரம் பெற்ற தரப்புகளிடமிருந்தும் அதிகமான முறைப்பாடுகள் இபொபஆ குழுவுக்கு கிடைத்தன. 2019 ஆம் ஆண்டில் கிடைத்த 463 முறைப்பாடுகளுடன் ஒப்பிடும்போது 2020 ஆம் ஆண்டில் 700 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. கொவிட் 19 ஊரடங்கு சட்ட காலத்திலும் மற்றும் நாடு முடக்கப்பட்டிருந்த காலத்திலும் இபொபஆ குழுவுடன் தொடர்புகொள்வதற்கான ஹொட்லைன், ஒன்லைன் வசதிகளையும் மற்றும் சமூக ஊடக வசதிகளையும் அறிமுகப்படுத்தியமை இதற்கான காரணமாகும். இபொபஆ இன் அதிகாரிகளை சந்திக்க வேண்டியிருந்த நபர்களுக்கு சந்திப்பதற்கான வாய்ப்பை வழங்கி ஒவ்வொரு தளத்திலும் ஊழியர்கள் தங்கள் சேவைகளை திறம்படச்செய்தனர். இபொபஆ, நுகர்வோர் மற்றும் அனுமதிப் பத்திரம் பெற்ற தரப்புகள் ஆகியவற்றுக்கு இடையே மொத்தம் 1701 தகவல்தொடர்புகள் மேற்கொள்ளப்பட்டன. அத்துடன் நுகர்வோர் செய்த முறைப்பாடுளும் நிரல்ப்படுத்தப்பட்டன.

அதிகமான முறைப்பாடுகள் வழியனுமதி பிரச்சினைகளுடனும் மற்றும் மாணிவாசிப்பு பிரச்சினைகளுடனும் சம்பந்தமான முறைப்பாடுகளாக காணப்பட்டன. கீழ்காணும் அட்டவணை இபொபஆ குழுவுக்கு 2020 ஆம் ஆண்டில் கிடைத்த முறைப்பாடுகளினதும் மற்றும் 2019 ஆம் ஆண்டில் கிடைத்த முறைப்பாடுகளினதும் ஒத்தீட்டு விபரங்களை சுட்டிக் காட்டுகின்றது.

	2019		2020	
வகுதி	முறைப்பாடுகள் எண்ணிக்கை	கடிதங்களின் எண்ணிக்கை	முறைப்பாடுகள் எண்ணிக்கை	கடிதங்களின் எண்ணிக்கை
புதிய மின்சார இணைப்புகள்	61	159	54	115
மின்சார துண்டிப்புகள் மற்றும் மீள மின்சார இணைப்புகளை வழங்கல்	16	30	15	36
மின்சார கட்டணம் சம்பந்தமான	36	73	105	168
மாணிவாசிப்பு கருவி சம்பந்தமான	22	72	13	37
வழியனுமதி	163	431	102	267
தரம் சம்பந்தமான	36	85	30	70
மின்சார கட்டண வகுதி மாற்றம்	11	43	12	26
ஏனையவை	118	306	79	186
மொத்தம்	463	1199	410	905

கொவிட் தொற்றுநோய் காலத்தில், மின்சார நுகர்வோரிடமிருந்து கிடைத்த முறைப்பாடுகளை தீர்க்கவும், அலுவலகத்தில் உள்ள அதிகாரிகளை சந்திக்காமல் ஒன்லைன் மூலம் அக்கறையுடைய தரப்புகளின் பிரச்சினைகளைத் தீர்க்கவும் இபொபஆ ஒரு ஹொட்லைன் சேவையை ஆரம்பித்தது. எனவே, 410 முறைப்பாடுகளுக்கு மேலதிகமாக, கொவிட்-19 ஊரடங்கு சட்டம் பிறக்கப்பட்டிருந்த காலத்தில், சமூக ஊடகங்கள், தொலைபேசி மற்றும் மொபைல் தளங்கள் (Whatsapp, viber போன்றவை) என்பவற்றின் மூலம் சுமார் 700 முறைப்பாடுகள் கிடைத்தன. அந்த சகல முறைப்பாடுகளுக்கும் தீர்வுகள் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளன.

மின்சாரம் (பிணக்குகள் தீர்த்தல்) ஒழுங்குவிதியின்படி பிணக்குகளை தீர்த்தல் (AP20/RU/COA/17)

பிரச்சினையில் சம்பந்தப்படுகின்ற முதல் இரு தரப்பினரும் அவற்றின் பிரச்சினைகளை தீர்த்துக் கொள்ள முடியாது எனும் போது, அது ஒரு பிணக்காக மாறும். இபொபஆ அது வர்த்தமானியில் பிரசுரித்துள்ள பிணக்குகள் தீர்த்தல் ஒழுங்குவிதியின் ஊடாக, சுமார் 15 பிணக்குகளை தீர்த்துக் கொள்ளும் வகையில் உரிய தரப்புகளை ஒருங்கிணைத்து, மின்சார பகிர்ந்தளிப்பு அனுமதிப் பத்திரம் பெற்ற தரப்புக்கும் மின்சார நுகர்பவருக்கும் இடையில் எழும் பிணக்குகள் தொடர்பாக 04 நடுத்தீர்ப்பு அமர்வுகளை நடத்தி அந்த பிணக்குகளை தீர்க்க உதவியது. பிணக்குகள் தீர்த்தல் செயல்முறை நுகர்வோர் சட்டப்பூர்வ செயல்முறைக்கு செல்லாமல் விரைவாக தங்கள் பிரச்சினைகளை தீர்க்க உதவுகிறது.

லெகோ நிறுவனத்துடன் இணைந்து மின்சார (பகிர்ந்தளிப்பு) செயல்திறன் நியம ஒழுங்குவிதிகளை (வர்த்தக நியமம்) செயற்படுத்தல் - AP20/CP/COA/01 LECO

மின்சார பகிர்ந்தளிப்பு அனுமதிப் பத்திரம் பெற்ற தரப்புகளின் வணிக நியம அளவீடு (நுகர்வோருக்கு மின்சாரத்தை பகிர்ந்தளிக்கும் தரப்பினர்) 2016 ஆம் ஆண்டில் 1975/44 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டதுடன் 2019 ஆம் ஆண்டு ஆரம்பமாகியது. லெகோ நிறுவனத்தின் வாடிக்கையாளர் சேவை செல்திறன் இலக்குகளை அளவிடும் பொருட்டு இபொபஆ 2020 ஆம் ஆண்டில் தர படிவங்களை தயாரித்தது. கிடைத்த தரவுகளை கொண்டு, இபொபஆ செயல்திறன் நியம ஒழுங்குவிதியில் இனங்காணப்பட்டுள்ள பிரிவுகள் தொடர்பாக லெகோ நிறுவனத்தின் செயல்திறனை மதிப்பிடும் செயற்பாட்டை ஆரம்பித்தது. இதன் மூலம், அக்கறையுடைய சகல தரப்புகளுக்கும் தரமான சேவையை வழங்க உதவும் பயன்பாட்டு சேவையை மேம்படுத்த இபொபஆ திட்டமிட்டுள்ளது.

வாடிக்கையாளர் வளாகங்களிலுள்ள மின்சார மாணிவாசிப்பு கருவிகளை மாற்றுவதற்கான வழிகாட்டல் - (AP20/CP/COA/03)

மாணிவாசிப்பு கருவியை மாற்றுதல் என்பது அனுமதிப் பத்திரம் பெற்ற தரப்புகளின் வாடிக்கையாளர் சேவையின் ஒரு பகுதியாகும். எனவே, இந்த வழிகாட்டல் மாணிவாசிப்பு கருவியை மாற்றும் நடைமுறையை சரியாக மேற்கொள்ள உதவும். நுகர்வோரின் முறைப்பாடுகளை யொளுவதற்கும் மற்றும் பிணக்குகளை தீர்ப்பதற்கும் உரிய வசதியாக மாணிவாசிப்பு கருவி மாற்றல் பற்றிய வழிகாட்டல் பயன்படுத்தப்படவுள்ளது. ஆகையால், இந்த வழிகாட்டல் ஆவணத்தின் முதல் வரைவை இபொபஆ நிறைவு செய்து. அக்கறையுடைய தரப்புகளின் கருத்துக்களைக் கருத்தில் கொண்டு, அனுமதிப் பத்திரம் பெற்ற தரப்புகளின் அந்த கருத்துக்கள் 2020 ஆம் ஆண்டில் அவதானிப்புக்காக அனுப்பப்பட்டன. வரைவு வழிகாட்டல் ஒரு மாணிவாசிப்பு கருவியை வேறொரு இடத்திற்கு மாற்றுவதற்கான கோரிக்கை செயல்முறை, ஒப்புதல் செயல்முறை, செலவுகள் மற்றும் கால வரையறை முதலியன பற்றி குறிப்பிடுகின்றது. புதிய வழிகாட்டலை கொண்டு, நுகர்வோர் மற்றும் பயன்பாடுகள் ஆகிய இரண்டிற்கும் உதவும் சேவையை விரைவில் கண்காணிப்பதற்கான செயல்முறையை எளிதாக்க இபொபஆ எதிர்பார்க்கின்றது.

மின்சார நுகர்வோரின் முறைப்பாடுகளை தீர்ப்பதற்கு மாகாண மட்டத்திலான ஒரு நடமாடும் சேவை - (AP20/CP/COA/11)

இபொபஆ, இலங்கை மின்சார சபை மற்றும் லெகோ நிறுவனம் ஆகியவற்றுடன் இணைந்து, 2020 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் தென் மாகாணத்தில் 500 எண்ணிக்கைக்கும் அதிகமான மின்சார நுகர்வோரின் பங்குபற்றலில் மின்சார நுகர்வோரின் முறைப்பாடுகள் தீர்ப்பதற்கு நாடளாவிய ரீதியில் முதல் முதலாக மாகாண மட்டத்திலான நடமாடும் சேவையை ஆரம்பித்தது.

மின்சார நுகர்வோரின் மின்சாரம் சம்பந்தமான முறைப்பாடுகளை அடையாளப்படுத்தி, அவ்வப்பொழுது அவர்களுக்கு தீர்வுகளை பெற்றுக் கொடுக்க அல்லது ஒரு நடைமுறையை பரிந்துரைக்க, தகவல்களை நாடுகின்ற மின்சார நுகர்வோருடன் ஒழுங்குறுத்துகை சாதனங்களை பகிர்ந்து கொள்ள, வசதிகளை வழங்கும் தரப்புகளின் மூலம் புதிய சேவைகளை அறிமுகப்படுத்த, பிரதேச செயலாளர்களினது அதிகாரத்தின் கீழுள்ள வழியனுமதிகள் தொடர்பான பிரச்சினைகளுக்கு தீர்வுகளை பெற்றுக் கொடுக்க, புதிய மின்சார இணைப்புகளை வழங்க என்பன போன்ற செயற்பாடுகளின் நிமித்தம் ஒவ்வொரு மாகாணத்திலும் இந்த நடமாடும் சேவை நடத்தப்படும்.

தென் மாகாணத்தில் நடத்திய நடமாடும் சேவை பற்றிய புள்ளிவிபரங்களின்படி, சுமார் 500 முறைப்பாடுகள் கிடைத்திருந்தன. வளாகங்களிலுள்ள சகல பிரச்சினைகளுக்கும் தீர்வுகள் பெற்றுக் கொடுக்கப்பட்டன.

வழியனுமதிகள், காணிகளை துண்டாடுவதற்கான (ஏலத்தில் விற்பனை செய்தல்) மின்சார விநியோகம், மாணிவாசிப்பு கருவிகளை மாற்றல், புதிய மின்சார இணைப்புகள் மற்றும் மின்சார இணைப்புகளின் பெயர்களை மாற்றல் என்பன பற்றிய அதிகமான முறைப்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

நுகர்வோர் ஆலோசனைக் குழு (CCC) ஒருங்கிணைப்பு AP20/RU/COA/18

2002 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க இலங்கைப் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு (இபொபஆ) சட்டத்தின் பிரிவு 29 இன் கீழ் நுகர்வோர் ஆலோசனைக் குழு (CCC) நியமிக்கப்பட்டுள்ளது. ஒன்பது மாகாணங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் ஒன்பது நபர்களும் மற்றும் மேலும் மூன்று நபர்களும் அடங்கலாக இந்த CCC 15 உறுப்பினர்களைக் கொண்டுள்ளது. இந்த மூன்று நபர்களில் மின்சாரம், பெற்றோலியம் மற்றும் நீர் வழங்கல் சேவை போன்ற ஒவ்வொரு பொது வசதி கைத்தொழில் சம்பந்தமான அறிவுடைய நபர்களுக்கு மத்தியிலிருந்து, இலங்கை வர்த்தக மற்றும் தொழில்துறை சம்மேளனத்தால் பரிந்துரைக்கப்படும் நபர் ஒருவரும், இலங்கை வர்த்தக தேசிய கூடத்தினால் பரிந்துரைக்கப்படும் நபர் ஒருவரும் மற்றும் இலங்கை வர்த்தக கூடத்தினால் பரிந்துரைக்கப்படும் நபர் ஒருவரும் அடங்குவார்கள். இபொபஆ நிறைவேற்ற வேண்டிய பொருத்தமான நியமங்கள், விழிப்புணர்வை மேம்படுத்தல் மற்றும் நுகர்வோரின் தேவைகளை கண்காணித்தல் முதலிய விடயங்களில் இந்த CCC ஆலோசனை குழு, இலங்கைப் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குவுக்கு ஆலோசனையை வழங்குகிறது. 2020 இல், CCC உறுப்பினர்கள் இபொபஆ இன் அக்கறையுடைய தரப்பு ஆலோசனை கேட்டறிதல் விடயத்திற்கு பெறுமதியான உள்ளீடுகளை வழங்கினார்கள். மேலும் இவர்கள், 2020 ஆம் ஆண்டிற்கு புதிதாக அறிமுகப்படுத்தப்பட்டிருந்த ஒழுங்குறுத்துகை சாதனங்களை மேலும் வலுப்படுத்தும் வகையிலும் இபொபஆ குழுவுக்கு உதவினார்கள்.

(AP20/RU/LIC/19) அனுமதிப் பத்திரங்களுக்கான விண்ணப்பங்கள் மற்றும் விலக்களிப்புகள் (புதிய பயன்பாடுகள், மாற்றங்கள், நீட்டிப்புகள்) மதிப்பீடு மற்றும் அனுமதிப் பத்திரங்கள் வழங்கல் மற்றும் விலைப்பட்டியல் (AP20/RU/LIC/19)

மின்சார சட்டத்தின்படி, மின்சாரத்தை உற்பத்தி செய்யவும், மின்சாரத்தை செலுத்தவும், விநியோகிக்கவும் இபொபஆ குழுவிடமிருந்து அனுமதிப் பத்திரம் பெறப்படுதல் வேண்டும். இது, இபொபஆ இன் மீண்டெழும் ஒரு செயல்பாடாகும். அதற்கிணங்க, 2020 ஆம் ஆண்டில், இபொபஆ குழுவுக்கு அனுமதிப் பத்திரரங்களை கோருகின்ற 49 விண்ணப்பங்கள் கிடைத்தன. இவற்றில் 31 விண்ணப்பங்களுக்கு அத்தகைய அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்பட்டன.

தொற்றுநோய் காலத்தில் மின்சார கட்டணத்தை செலுத்துவதற்கான புதிய வழிகாட்டல்கள்

இபொபஆ இலங்கை மின்சார சபை (இமிச) மற்றும் லெகோ நிறுவனம் ஆகியவற்றுடன் இணைந்து மாதாந்த மின்சார கட்டணங்களை விநியோகிப்பதில் மின்சார நுகர்வோருக்கு நியாயமான தன்மையை உறுதிப்படுத்தவும், பயன்பாட்டு சேவை வழங்குநர்களின் நிதி நிலைமையை உறுதிப்படுத்தவும் மற்றும் மறுசீரமைக்கவும் வழிகாட்டல்களை தயாரித்து வழங்கியது. கொவிட்-19 தொற்றுநோய் காலத்தில் மாதாந்த மின்சார கட்டணங்களை செலுத்த கால அவகாசம் பெற்றுக் கொடுக்கப்பட்டது.

மின்சார கட்டணங்களை விநியோகிப்பதில் தாமதம் ஏற்பட்டாலும், சலுகை விலையில் கிடைக்கும் மின் அலகுகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப (விகித அடிப்படையில்) மின்சார கட்டணத்தை கணக்கிடவும், மின்சார கட்டணத்தை செலுத்த போதிய கால அவகாசம் வழங்கவும் வழிகாட்டல் தயாரிக்கப்பட்டது. வழிகாட்டல் நெறிமுறைகளை தயாரிக்கும் போது இமிச மற்றும் லெகோ நிறுவனம் ஆகியவற்றினால் சில மின்சார நுகர்வோரின் முறைப்பாடுகள் கவனத்தில் கொள்ளப்பட்டன.

நுகர்வோருக்கு அதிகபட்ச நியாயம் கிடைப்பதை உறுதிசெய்வதற்காக, தனிமைப்படுத்தல் ஊரடங்கு சட்ட காலப் பகுதியில் வரும் மின்சார கட்டணங்களை தயாரிக்கும் பின்வரும் சிபாரிசுகள் நடைமுறைப்படுத்தப்பட்டன.

1. தனிமைப்படுத்தல் ஊரடங்கு சட்டம் தொடங்கிய பின்னரும் மற்றும் மாணிவாசிப்பு இறுதியாக கணிப்பிடப்பட்டதன் பின்னரும் விநியோகிக்கப்படும் சகல மின்சார கட்டணங்களும் மாதாந்த அடிப்படையில் ஒவ்வொரு மாதத்திற்கும் தனித்தனி மின்சார கட்டணங்கள் விநியோகிக்கப்படுதல் வேண்டும், இது மின்சார அலகுகளுக்கான சலுகை விலையின் உரிமையை உறுதிப்படுத்துவதாகவும் (விகிதாசார அடிப்படையில்) அமைதல் வேண்டும்.

2. நுகர்வோருக்கு விநியோகிக்கப்படும் தனித்தனியான மின்சார கட்டணங்களை செலுத்துவதற்கு வழங்கப்படும் சலுகை காலம் இமிச மற்றும் லெகோ நிறுவனம் ஆகியவற்றினால் வழங்கப்படும். அதன்படி, இந்த கட்டணங்களை செலுத்துவதற்கு உரிய கால அவகாசமும் மற்றும் நிபந்தனைகளும் அறிவிக்கப்படாத வரையிலும் மின்சாரம் துண்டிக்கப்படக்கூடாது.

3. கடந்த மின்சார மாணிவாசிப்புக்கும் மற்றும் அடுத்த மின்சார மாணிவாசிப்புக்கும் இடையிலான கால இடைவெளி ஒரு மின்சார கட்டண சுழற்சி காலத்திற்கு அதிகமாக இருக்கலாம். ஆகையால், குறித்த அந்த காலப் பகுதிற்கு நுகர்ந்த மொத்த மின்சார நுகர்வு (மின்சார அலகுகள்) ஒவ்வொரு மின்சார கட்டண

காலத்திற்கும் அல்லது மின்சார கட்டணங்கள் விநியோகிக்கப்படுகின்ற போதும் (விகிதாசார அடிப்படையை அல்லது சலுகை மின்சார கட்டண தீர்வையை உறுதிசெய்து) சமனாக பிரித்து கணிப்பிடப்படும். ஒரு சில மாதங்களுக்குள் மின்சார நுகர்பவரினால் நுகரப்படும் மொத்த மின்சார அலகுகள், மின்சார கட்டணங்களை தயாரிக்கும் போது, இதனைக் கொண்டு நியாயமான ஒரு விதத்தில் ஒவ்வொரு மாதத்திற்கும் சீராக்கப்பட்டு வேறாக்கப்படலாம். இதே நேரம், சரியான மாணிவாசிப்பு இல்லாமல் மதிப்பிடப்படும் மின்சார கட்டணங்கள் சில வாடிக்கையாளர்களுக்கு ஏற்கெனவே கிடைத்திருக்கலாம். அவ்வாறு மதிப்பிடப்படும் மின்சார கட்டணத்திலுள்ள மின்சார அலகுகளுக்கும் மற்றும் மாணிவாசிப்பு வெயிடப்பட்டதன் பின்னருள்ள மின்சார அலகுகளின் எண்ணிக்கைக்கும் இடையில் ஒரு வித்தியாசம் காணப்படுமாயின், அந்த வித்தியாசம் அடுத்த மின்சார மாணிவாசிப்பு கணிப்பிடப்பட்டதன் பின்னர் திருத்தப்படும். அத்தகைய திருத்தங்கள் இருக்குமாயின் அந்த திருத்தங்கள் பற்றி மின்சார நுகர்வோருக்கு அறிவிக்கப்படும்.

4. மின்சார கட்டணங்களை சரியாக உரிய நேரத்திற்கு விநியோகிக்காத வரையில் தற்போது விநியோகிக்கப்பட்டுள்ள அல்லது எதிர்காலத்தில் விநியோகிக்கப்படவுள்ள மின்சார கட்டணங்கள் தொடர்பான முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ள சந்தர்ப்பத்தில், மின்சார இணைப்புகள் துண்டிக்கப்படுதல் கூடாது. இமிச மற்றும் லெகோ நிறுவனம் ஆகியன அத்தகைய நுகர்வோர் முறைப்பாடுகளை விரைவாக தீர்த்துவைக்கும். நுகர்பவர் தனது மின்சார கட்டணம் தொடர்பாக தான் செய்த முறைப்பாடு தொடர்பாக தனக்கு கிடைத்த தீர்மானத்தில் அவர் உடன்படவில்லையெனில், அத்தகைய நுகர்பவர் தனது பிரச்சினை விடயத்தை இபொபஆ குழுவுக்கும் குறிப்பீடு செய்யலாம்.

பலன் 02

மின்சார நுகர்வோருக்கான நியாயமான விலையும் மற்றும் மின்சார அனுமதிப் பத்திரம் பெற்ற தரப்புகளுக்கான நிலையான நிதி ஸ்திரத்தன்மையும்

ஏதாவது ஒரு மின்சார மாணிவாசிப்பு கருவியின் பதிவு மாற்றப்பட்டிருப்பதாக சந்தேகிக்கப்படும் போது விசாரணையை மேற்கொள்வதற்கான வழிகாட்டல்கள் (AP19/CP/RA/03)

மின்சார மாணிவாசிப்பு கருவிகளின் மின்சார பதிவுகள் மாற்றப்பட்டிருப்பதாக சந்தேகிக்கப்படும் போது, அது பற்றி, மின்சார பகிர்ந்தளிப்பு தரப்புகள் (DL) மேற்கொள்ளும் விசாரணைகள் தொடர்பாக கனிசமான முறைப்பாடுகள் இபொபஆ குழுவுக்கு கிடைக்கின்றன. அத்தகைய விசாரணையை மேற்கொள்வதற்கு வெளிப்படையான ஒரு நடைமுறை இல்லாமை மற்றும் DL கள் அத்தகைய விசாரணைகளை மேற்கொள்வதில் காட்டுகின்ற முரண்பாடு ஆகியன பிரதான காரணங்களாக இனங்காணப்பட்டுள்ளன. அத்தகைய விசாரணையை மேற்கொள்கின்ற போது DL இன் பதவியணியினரின் செயற்பாடுகள் சில வேளைகளில் மிகவும் கடுமையாக இருப்பதாகவும் மற்றும் மின்சார நுகர்வோரை அவர்கள் பயமுறுத்துவதாகவும் தெரிய வந்தது. அத்தகைய விசாரணையை மேற்கொள்ளும் போது DLகள் பின்பற்ற வேண்டிய சரியான ஒரு வழிகாட்டல், அத்தகைய சம்பவங்கள் பற்றி ஆராயும் பொருட்டு DLகளுக்கு இருக்கின்ற உரிமைகளை பாதுகாப்பதற்கும் மற்றும் மின்சார நுகர்வோரின் உரிமைகளை காப்பதற்கும் மிக முக்கியமான தேவையாக மாறியுள்ளது.

குறித்த வழிகாட்டலை தயாரிப்பதில், இபொபஆ ஏதாவது மின்சார மாணிவாசிப்பு கருவியின் பதிவு மாற்றப்பட்டிருப்பதாக சந்தேகிக்கப்படும் போது, அது பற்றி விசாரணை செய்வது தொடர்பான சட்டத்தையும் மற்றும் ஒழுங்குறுத்தும் வேலைச்சட்டகத்தையும் ஆராய்ந்து, இலங்கை மின்சார சபையும் வ/ப இலங்கை மின்சார (தனியார்) நிறுவனமும் செயற்படுத்தும் ஏதாவது மின்சார மாணிவாசிப்பு கருவியின் பதிவு மாற்றப்பட்டிருப்பதாக சந்தேகிக்கப்படும் போது விசாரணையை மேற்கொள்வது தொடர்பாக ஏற்கெனவேயிருக்கின்ற வழிகாட்டல்களை அல்லது நடைமுறைகளை மீளாய்வு செய்ததுடன் ஏதாவது ஒரு மின்சார மாணிவாசிப்பு கருவியின் பதிவு மாற்றப்பட்டிருப்பதாக சந்தேகிக்கப்படும் போது விசாரணையை மேற்கொள்வதற்கான வழிகாட்டல்கள் / நடைமுறைகள் தொடர்பான சிறந்த சர்வதேச செயன்முறைகளையும் மீளாய்வு செய்தது.

அதற்கிணங்க, 2020 ஆம் ஆண்டில், இபொபஆ மின்சார நுகர்வோருக்கும் மற்றும் மின்சார வசதியை வழங்கும் தரப்புகளுக்கும் நன்மை அளிக்கக் கூடிய வகையில் அதிகாரமளிக்கின்ற செயல்முறை மற்றும் அங்கீகாரமளிக்கும் செயல்முறை, கால வரையறை மற்றும் ஒரு விசாரணையின் போது பின்பற்ற வேண்டிய நடவடிக்கைகள் என்பன அடங்கலாக பொருத்தமான சட்டங்கள், ஒழுங்குவிதிகள், விதிமுறைகள், விதிக்கோவைகள் மற்றும் முறையியல்கள் என்பவற்றை அனுசரித்து, ஏதாவது ஒரு மின்சார மாணிவாசிப்பு கருவியின் பதிவு மாற்றப்பட்டிருப்பதாக சந்தேகிக்கப்படும் போது விசாரணையை மேற்கொள்வதற்கான ஒரு வழிகாட்டியை தயாரித்தது.

மின்சாரக் கைத்தொழிலை ஈர்ப்பதற்கான முதலீடு பற்றிய கொள்கை ஆலோசனை

விடேமாக இந்தியா மற்றும் பங்காளதே'ம் போன்ற பிராந்திய மின்சார சந்தைகளுடன் ஒப்பிடும் போது, மின்சாரக் கைத்தொழில் அவ்வளவு கவர்ச்சியான முதலீடுகளை கொண்டிருப்பதாக இல்லை என கடந்த 10 ஆண்டுகளாக இருந்து வருகின்ற முதலீட்டு அளவுகள் குறிப்பிடுகின்றன. வினைத்திறனற்ற பெறுகை செயல்முறைகள் மற்றும் மின்சார செலுத்துகை முறைமையின் மந்தமான அபிவிருத்தி ஆகியன மின்சார உற்பத்தி வணிக செயற்பாடுகளினுள் தனியார் முதலீடுகளை ஈர்ப்பதற்கான ஒரு பெரும் தடையாக காணப்படுகின்றன. இபொபஆ அக்கறையுடைய தரப்புகளுடனான ஆலோசனையுடன் தற்போதைய நிலைமையை ஆராய்ந்து, அது தொடர்பான ஒரு அறிக்கையை தயாரித்து, மின்சார கைத்தொழிலில் முதலீடுகளை ஊக்குவிக்கக் கூடிய மின்சார செலுத்துகை திறந்த அணுகுபிரவேசம், மின்சார சுழற்சி மற்றும் தனியார் மின்சார செலுத்துகை (மின்சார மார்க்கங்கள் மற்றும் இணைந்த சேவைகள்) முதலீடுகள் என்பன போன்ற கட்டமைப்பு சார்ந்த மாற்றங்களாக, இலங்கையின் மின்சார கைத்தொழிலுக்கு சிறந்த ஒரு முதலீட்டு சூழலை உருவாக்கும் பொருட்டு என்ன நிகழ வேண்டும் என்பது பற்றிய ஒரு கொள்கை ஆலோசனையாக அதனை சமர்ப்பித்தது. மின்சார வலையமைப்பின் ஒரு புள்ளியிலிருந்து உற்பத்தி செய்யப்படும் மின்சாரத்தை அந்த மின்சார வலையமைப்பிலுள்ள (மின்னுற்பத்தி தரப்பின் மின்சார வலையமைப்பு எல்லையை தாண்டிய) மற்றொரு புள்ளிக்கு கடத்துவது தொடர்பான மின்சார சுழற்சியின் முக்கியத்துவத்தை பற்றி குறித்த கொள்கை ஆவணம் ஆராய்கின்றது. மின்சார செலுத்துகை / மின்சார பகிர்ந்தளிப்பு வலையமைப்புகளை இயக்குகின்ற தரப்புகள், இந்த மின்னுற்பத்தி தரப்புகளினால், மின்சார உற்பத்தி புள்ளியிலிருந்து அதிக தூரத்திலுள்ள ஒரு மூன்றாம் தரப்புக்கு அவற்றின் மின்சாரத்தை விற்பனை செய்வதற்கு அத்தகைய தரப்புகளை அனுமதித்து இந்த மின்னுற்பத்தி தரப்புகளுக்கு அத்தியாவசியமாக அவற்றின் அந்த வலையமைப்புகளை வாடகைக்கு விடும்.

2009 இன் 20 ஆம் இலக்க இலங்கை மின்சார சட்டத்தின் 16 (ஆ) பிரிவின் பிரகாரம், மின்னுற்பத்தி அனுமதிப் பத்திரம் பெற்ற தரப்பு, அதன் மொத்த உற்பத்தியையும் (பிரத்தியேகமான மற்றும் அது மாத்திரம்தான்) சக்தி சுழற்சியை கட்டாயமாக மறுக்கின்ற மின்சார செலுத்துகை அனுமதிப் பத்திரம் பெற்ற தரப்புக்கு விற்பனை செய்ய தேவைப்படுத்தப்படுகின்றது. ஆதலால், சக்தி சுழற்சியை அனுமதிக்கும் பொருட்டு, மின்சாரக் கைத்தொழிலில் அதிக தனியார் முதலீடுகளுக்காக அனுமதிக்கின்ற மின்சார உற்பத்தி அனுமதிப் பத்திரத்தை கொண்டிருக்கக்கூடிய தரப்புகளை மட்டுப்படுத்தும், அதே சட்டத்தின் 9(1) ஆம் பிரிவுக்கு பொருத்தமான திருத்தங்களுடன், 2009 இன் 20 ஆம் இலக்க இலங்கை மின்சார சட்டத்தின் 16 (ஆ) பிரிவு நீக்கப்படுதல் வேண்டும் என இபொபஆ இனங்கண்டுள்ளது.

இது தவிர மின்சார உற்பத்தி முதலீடுகளை ஈர்ப்பதற்கு தேவையான அரச தலையீடுகளை குறைத்து, மின்சார உற்பத்தி வணிகத்தில் தனியார் முதலீட்டு தரப்புகளுக்கு ஒரு சமத்துவமான ஒரு பிரிவை ஏற்படுத்தக் கூடிய முதலீட்டு திட்டமிடுகைக்கும் மற்றும் மின்சார முறைமை செயற்பாட்டு தொழிற்பாடுகளுக்கும் (எல்லா சாத்தியமான சந்தர்ப்பங்களிலும் அரசாங்கத்தின் கட்டுப்பாடுடைய ஆனாலும் சொந்த மின்னுற்பத்தி பொறித் தொகுதிகளை கொண்டிருக்காத) பொறுப்புடைய ஒரு சுயாதீன மின்சார செலுத்துகை இயக்கும் தரப்பை உருவாக்குவதையும் இந்த கொள்கை ஆவணம் இனங்காணுகின்றது.

பலன் 03

உயிர் வாழும் ஒவ்வொரு உயிரினதும், பொது மக்களினதும் அனுதிப் பத்திரம் பெற்ற தரப்புகளினதும் மற்றும் இயக்கும் தரப்புகளினதும் சொத்துக்களினதும் மற்றும் உடமைகளினதும் உன்னத பாதுகாப்பு

இபொபஆ குழுவுக்கு குறித்தொதுக்கப்பட்டுள்ள தொழிற்பாடுகளுக்கு மத்தியில், மின்சார உற்பத்தியிலிருந்தும், மின்சார செலுத்துகையிலிருந்தும், மின்சார பகிர்ந்தளிப்பிலிருந்தும், மின்சார விநியோகத்திலிருந்தும் மற்றும் மின்சார பாவனையிலிருந்தும் எழுகின்ற ஆபத்துக்களிலிருந்து, 2009 இன் 20 ஆம் இலக்க இலங்கை மின்சார சட்டத்தின் 4 (1) ஆம் பிரிவுக்கு இணங்க, இபொபஆ பொது மக்களை பாதுகாக்கும் பொறுப்பை கொண்டுள்ளது. மின்சார நுகர்வோரினதும் மற்றும் மின்சார அனுமதிப் பத்திரம் பெற்ற தரப்புகளினதும் மூலமான மின்சார பாவனையின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் முகமாக இபொபஆ அதிக பல ஒழுங்குறுத்துகை சாதனங்களை தயாரித்துள்ளது. 2012 ஆம் ஆண்டில் நிகழ்ந்த மின்சார அதிர்ச்சிகளினால் சம்வித்த 180 மரணங்களை 2018 ஆம் ஆண்டில் 89 மரணங்களாக இபொபஆ குழுவால் குறைக்க முடிந்திருந்தது. இது அநேகமாக 50 வீதமான ஒரு குறைப்பாகும். சர்வதேச அளவுகோலுக்கு இணங்க, மின்சார அதிர்ச்சியால் நிகழக் கூடிய மரணம் ஆண்டொன்றுக்கு பத்து மில்லியன் மக்களுக்கு ஒரேயொரு (01) மரணம் நிகழ்வதாக குறிப்பிடப்படுகின்றது.

2020 ஆம் ஆண்டில், மின்சார அதிர்ச்சியினால் 102 மரணங்கள் சம்பவித்ததாகவும், அந்த எண்ணிக்கை 2010 ஆம் ஆண்டிலிருந்து 35 வீதம் வரை குறைந்திருப்பதாகவும் இபொபஆ வெளியிட்டுள்ள 2020 ஆம்

ஆண்டிற்கான மின்சார அதிர்ச்சிகள் பற்றிய அறிக்கை வெளிப்படுத்தியது. இலங்கையில் மின்னியலாளர்களுக்கு அனுமதிப் பத்திரத்தை வழங்குவதற்கான வேலைச்சட்டகம், இலங்கையில் பாவிக்கப்படும் மின்னாப்புகளுக்கும் மற்றும் மின் சொக்கெட்டுக்களுக்கும் உரிய தேசிய நியமங்கள், மற்றும் சர்வதேச அளவுகோலை அடைந்து கொள்வதற்கான நோக்குடன் பொது மக்களுக்கும் மற்றும் வளாகங்களுக்கும் உரிய பாதுகாப்பான ஒரு மின்சார சூழலை ஏற்படுத்தும் வகையில் வளாகங்களுக்கான மின்சார மார்க்கங்கள் அமைய வேண்டிய ஆகக்குறைந்த தூரம் சம்பந்தமான விதிமுறைகள் மற்றும் ஒழுங்குவிதிகள் முதலியன அடங்கலாக பல ஒழுங்குறுத்துகை சாதனங்களை அறிமுகப்படுத்துவதற்கும் மற்றும் மின்சாரத்தை பாதுகாப்பான முறையில் பாவிப்பது பற்றி பொது மக்களுக்கு விழிப்பூட்டுவதற்கும் மேற்கொள்ளப்பட்டிருந்த பல நடவடிக்கைகள் இத்தையை குறைவுக்கு காரணமாகும்.

மின்சார மரணங்கள் பற்றிய பகுப்பாய்வு அறிக்கை - 2020

2020 ஆம் ஆண்டு காலப் பகுதியில், மின்சார இலங்கையில் 102 மரணங்கள் சம்பவித்ததாக பதிவாகியது. 2020 ஆம் ஆண்டில் பதிவாகிய மின்சார் ஏற்பட்டிருந்த மரணங்கள் 2010 ஆம் ஆண்டில் நிகழ்ந்த சம்பவங்களிலிருந்து 35 வீதம் குறைவானதாகும் என தெரிய வந்தது. 2010 ஆம் ஆண்டு காலப் பகுதியில் மின்சார அதிர்ச்சியினால் இலங்கையில் 156 மரணங்கள் சம்பவித்ததாக பதிவாகியது. இந்த எண்ணிக்கை 2012 ஆம் ஆண்டில் அதிகரித்தது. அதாவது அந்த ஆண்டில்180 மரணங்கள் பதிவாகியிருந்தன. எனினும், வருடமொன்றுக்கான மின்சார அதிர்ச்சியினால் சம்பவிக்கும் மரணங்களின் எண்ணிக்கை 2015 ஆம் ஆண்டிலிருந்து சுமார் 100 வரை குறைந்தள்ளதாக புதிதாக வெளியாகிய அறிக்கை சுட்டிக் காட்டுகின்றது.

பயிர்களை பாதுகாப்பதற்காக அல்லது விலங்குகளை கொல்லுவதற்காக சட்டமுறையற்ற விதத்தில் மின்சார கம்பிகளை இணைக்கும் செயல் நாட்டில் மின்சார அதிர்ச்சியினால் அதிக மரணங்கள் சம்பவிப்பதற்கான முக்கிய காரணமாக இனங்காணப்பட்டுள்ளது. இதே நேரம் வீட்டில் / வேலை செய்யும் இடத்தில் சிறியளவான மின்சார பழுதுபார்ப்பு வேலையை செய்தல் மற்றும் மின்சார மார்க்கங்களுக்கு அருகில் செயற்பாடுகளை மேற்கொள்ளல் ஆகியனவும் 2020 ஆம் ஆண்டில் மின்சார அதிர்ச்சியினால் ஏற்பட்டிருந்த மரணங்களுக்கு பெரிதும் பங்களித்துள்ளன. இந்த மரணங்களின் எண்ணிக்கை மின்சார அதிர்ச்சியினால் ஏற்படும் மொத்த மரணங்களிலிருந்து சுமார் 45 வீதம் என்ற அளவில் காணப்படுகின்றது.

இலங்கையில் அதிகமான கிராமங்களில் மின்கடத்திகள் இல்லாமல் வெறுமனே மின்சாரம் விநியோகிக்கப்படுவதால், சில மக்களுக்கு மின்சாரம் விலங்குகளை கொல்லுவதற்கும், பயிர்களை பாதுகாப்பதற்கும் அல்லது மீன் பிடிப்பதற்கும் கூட ஒரு சிறந்த சாதனமாக மாறியுள்ளது. புள்ளிவிபரங்களின்படி, மீன் பிடிப்பதற்காகவும் மற்றும் பயிர்களை பாதுகாப்பதற்காகவும் சட்டமுறையற்ற விதத்தில் மின்சாரத்தை பாவிப்பதனால் அநேகமான மக்கள் மின்சார அதிர்ச்சிக்குள்ளாகி மரணிப்பது கள்ளத்தனமாக மின்சார வேலிகளை அமைக்கும் மக்கள் தான் என பதிவாகியுள்ளது. மேலும், வன விலங்குகளை கொல்லுவதற்காக மின்சாரத்தினால் செய்யப்படும் கன்னிகளினால் மின்சாரம் பாய்ந்து அப்பாவி மக்கள் மரணிப்பதாகவும் அறிக்கை குறிப்பிடுகின்றது.

2020 ஆம் ஆண்டு காலப் பகுதியில் நிகழ்ந்த 54 வீதமான மின்சார சம்பவங்கள் மத்திய மாகாணம், தென் மாகாணம் மற்றும் வடமேல் மாகாணம் ஆகிய மாகாணங்களில் நிகழ்ந்ததாக பதிவாகியது. மேலும் மத்திய மாகாணம் மற்றும் தென் மாகாணம் ஆகிய மாகாணங்களில் மின்சார அதிர்ச்சியினால் 40 மரணங்கள் சம்பவித்ததாகவும் பதிவாகியுள்ளது. வட மாகாணத்தில் மிகவும் குறைந்த எண்ணிக்கையான அத்தகைய மரணங்கள் சம்பவித்ததாக பதிவாகியது. கடந்த 5 (2016 -2020) ஆண்டு காலப் பகுதியில் மின்சார அதிர்ச்சியினால் நிகழ்ந்த 37 வீதமான மரண சம்பவங்கள் தென் மாகாணம் மற்றும் மத்திய மாகாணம் ஆகிய மாகாணங்களில் பதிவாகியுள்ளதாக அறிக்கை குறிப்பிடுகின்றது.

2020 ஆம் ஆண்டு காலப் பகுதியில் மின்சார நிகழ்ந்த 40 வீதமான மரணங்கள் இலங்கையிலுள்ள 39 பொலிஸ் பிரிவுகளில் கண்டி, பண்டாரவளை, தங்காலை, இரத்தினபுரி மற்றும் பொலன்னறுவை ஆகிய பொலிஸ் பிரிவுகளில் பதிவாகியுள்ளதாக 2020 ஆம் ஆண்டிற்கான மாகாண மட்டத்திலான தரவுகள் சுட்டிக் காட்டுகின்றன. கடந்த ஆண்டில், மின்சார அதிர்ச்சியினால் அதிகளவான அதாவது 14 மரணங்கள் கண்டி பொலிஸ் பிரிவில் சம்பவித்துள்ளதாக பதிவாகியது. கண்டி பொலிஸ் பிரிவில் மின்சார அதிர்ச்சியினால் சம்பவித்த 45 மரணங்கள் நாட்டில் 2016 -2020 வரையான 5 ஆண்டு காலப் பகுதிகளில் சம்பவித்த அதிகளவான மரணங்களாக காணப்படுகின்றன.

மின்சார அதிர்ச்சியினால் ஏற்படும் மரணங்களுக்கு, அதிகமான ஆண்கள் ஆளாகுவதாகவும், 2020 ஆம் ஆண்டு காலப் பகுதியில் மின்சார அதிர்ச்சியினால்பதிவாகிய மொத்த மரணங்களில் அது 81 வீதமாக காணப்படுவதாகவும் நவீன புள்ளிவிபரங்கள் சுட்டிக் காட்டுகின்றன. 2020 ஆம் ஆண்டு காலப் பகுதியில் மின்சார அதிர்ச்சியினால் மரணத்திற்காளாகிய மிகவும் பாதிக்கக் கூடிய வயது தொகுதியினர் 40 வயதுக்கும் மற்றும் 50 வயதுக்கும் இடையிலான வயது தொகுதியை சேர்ந்த நபர்களாகும். இந்த மரண சம்பவங்கள் மின்சார அதிர்ச்சியினால் ஏற்பட்டிருந்த 102 மரணங்களில் 19 வீதமாக காணப்படுகின்றது.

சர்வதேச அளவீடுகளுக்கு இணங்க, ஆண்டொன்றுக்கு ஒரு மில்லியன் மக்களுக்கு ஒரு (01) மின்சார அதிர்ச்சி மரணம் சம்பவிக்கும் சாத்தியம் காணப்படுவதாக கூறப்படுகின்றது. 2019 ஆம் ஆண்டில், இலங்கையின் மின்சார அதிர்ச்சி மரண சுட்டி உலக அளவீடுகளை விடவும் ஐந்து மடங்குகள் அதிகமாக காணப்பட்டது.

மின்சார பாதுகாப்பு தொடர்பாக அக்கறையுடைய தரப்புகளின் செயற்பாடுகளை இபொபஆ மாதாந்தமும் மற்றும் வருடாந்தமும் கண்காணித்து வருகின்றது. இதன் கீழ், இபொபஆ கடந்த கால மின்சார அதிர்ச்சி மரணங்கள்

பற்றிய அறிக்கைகளையும் மற்றும் மின்சார அதிர்ச்சி போக்கு பற்றிய பகுப்பாய்வையும் அணுகி ஆராய்ந்து மின்சார பாதுகாப்பு ஒழுங்குவிதிகளினதும் மற்றும் நியமங்களினதும் செயற்படுத்துகையை கண்காணிக்கின்றது.

2020 ஆம் ஆண்டில், இபொபஆ 2019 ஆம் ஆண்டிற்கான மின்சார அதிர்ச்சி மரணங்கள் பற்றிய பகுப்பாய்வு அறிக்கையை தயாரித்தது. மின்சார அதிர்ச்சி மரணங்கள் பற்றிய இந்த பகுப்பாய்வு அறிக்கை இலங்கைப் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் (இபொபஆ) ஒழுங்குறுத்துகை சாதனங்களை மேலும் வலுப்படுத்த உதவியது.

வீதி அபிவிருத்தியுடன் இணைந்த பயன்பாட்டு சேவை தாழ்வார கருத் திட்டங்களுக்கான குறித்த விசேட பொருளாதார மாதிரியை தயாரித்தல் - (AP20/CP/INS/02)

வீதி ஓரங்களில் சரியான பயன்பாட்டு சேவை தாழ்வாரங்கள் இல்லாதிருப்பது மனிதனின் உயிருக்கும் மற்றும் உடமைகளுக்கும் மேன்தலை மின்சார மார்க்கங்களினால் ஏற்படும் ஆபத்து, நம்பத்தகு தன்மை பற்றிய பிரச்சினைகள், நிர்மாண இடவசதிகளுக்கான தடைகள், இடையூறுகள் மற்றும் குறிப்பாக நகரப் புறங்களிலும் சன நெருக்கடியான பிரதேசங்களிலும் மேற்கொள்ளப்படும் பயன்பாட்டு வசதி (மின்சாரம், நீர், தொலைத்தொடர்பு வசதி) நிர்மாணங்களினால் அடிக்கடி வீதிகளுக்கு ஏற்படும் பாதிப்புகள் என்பன போன்ற பிரச்சினைகளுக்கு காரணமாக அமைந்துள்ளது. பயன்பாட்டு சேவை தாழ்வார கருத் திட்டங்களை செயற்படுத்துவது அதிகம் செலவு வாய்ந்ததாகும். ஆகையால், நீண்டகால அடிப்படையில் வீதி அபிவிருததி அதிகார சபைகள், பயன்பாட்டு சேவை வழங்கும் தரப்புகள், வாடிக்கையாளர் தரப்புகள் மற்றும் பொது மக்கள் முதலிய சகல தரப்புகளினாலும் சேருகின்ற முழு நன்மைகளையும் மதிப்பீடு செய்யாமல் பயன்பாட்டு சேவை தாழ்வாரங்கள் ஒருங்கிணைப்பு கருத் திட்டங்களை பொருளாதார ரீதியில் நியாயப்படுத்த முடியாது. எனவே, பாதுகாப்பாக நிதியிடுவதற்கு திறைசேரியை அல்லது உரிய பொருத்தமான முகவர் நிலையங்களை திருப்திப்படுத்தும் வகையில் வீதி அபிவிருத்தி கருத் திட்டங்களுடன் சேர்த்து பயன்பாட்டு சேவை தாழ்வார கருத் திட்டங்களையும் செயற்படுத்துவதுடன் சம்பந்தப்படுகின்ற பொருளாதார நன்மைகளையும் மற்றும் பொருளாதார கிரயங்களையும் மதிப்பிடுவது அவசியமாகும். ஆதலால், வீதிகளின் ஓரமாக பயன்பாட்டு தாழ்வார கருத் திட்டங்களை செயற்படுத்த வேண்டும்.

அதற்கு இணங்க, 2020 ஆம் ஆண்டில் இபொபஆ, பொருளாதார மதிப்பீட்டையும் மற்றும் வீதி அபிவிருத்தி கருத் திட்டங்களின் கீழ் பயன்பாட்டு சேவை தாழ்வார கருத் திட்டங்களை ஒன்றிணைக்கும் சிந்தனைமிகுந்த பகுப்பாய்வையும் மேற்கொள்வதற்கு தீர்மானமெடுக்கும் தரப்புகளினால் பிரயோகிக்கக் கூடிய ஒரு பொருளாதார மதிப்பீட்டு மாதிரியை தயாரித்துள்ளது. புத்தம் புதிய மாதிரியில் பயன்பாட்டு சேவை கருத் திட்டங்களின் செயற்படுத்துகை மின்சார ஆபத்துக்கள், வாகன விபத்துக்கள், வாகன நெரிசல்கள் போன்ற நிகழ்வுகளை குறைத்து, சேவை வழங்கும் தரப்புகளின் நம்பத்தகு தன்மையை அதிகரிப்பதுடன் அர்ப்பணிப்புடைய தாழ்வார சேவை வசதிகள் இல்லாமை தொடர்பாக பயன்பாட்டு வசதி நகர்த்தலிலும் பராமரிப்பிலும் ஏற்படும் செலவுகளையும் குறைக்கும். ஆகையால், பயன்பாட்டு வசதிகளின் பாதுகாப்பும் பொருளாதாரமும் மேம்படும்.

வீட்டு நீர் பம்பிகளுக்கான மின்சார பாதுகாப்பு பயன் வழிகாட்டல் - (AP20/CP/INS/03)

இலங்கைப் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவுக்கு (இபொபஆ) சாட்டப்பட்டுள்ள தொழிற்பாடுகளுக்கு மத்தியில், இபொபஆ 2009 இன் 20 ஆம் இலக்க இலங்கை மின்சார சட்டத்தின் 4(1) ஐ ஆம் பிரிவுக்கு இணங்க, மின்சார உற்பத்தி, மின்சார செலுத்துகை, மின்சார பகிர்ந்தளிப்பு, மின்சார விநியோகம் மற்றும் மின்சார பாவனை ஆகிய செயற்பாடுகளிருந்து எழுகின்ற ஆபத்துக்களிலிருந்து பொது மக்களை பாதுகாப்பதற்கான ஒரு பொறுப்பை கொண்டுள்ளது.

2019 ஆம் ஆண்டில், இபொபஆ வீடுகளில் பயன்படுத்தப்படும் நீர் பாம்பிகள் வீட்டு மட்டத்தில் ஏற்படும் மின்சார அதிர்ச்சி நிகழ்வுகளின் எண்ணிக்கையில் ஒரு தாக்கத்தை கொண்டிருப்பதை அவதானித்தது. ஆகையால், இந்த இபொபஆ பாதுகாப்பாக ஒரு நீர் பாம்பியை எவ்வாறு இயக்குவது, ஒரு நீர் பாம்பியை எவ்வாறு நிறுவுவது மற்றும் ஒரு ஆபத்து எழுந்தால் மேற்கொள்ள வேண்டிய பாதுகாப்பான பரிகார நடவடிக்கைகள் என்பன அடங்கிய கைந்நூலை உள்ளடக்கும் இலங்கையில் வீட்டு நீர் பாம்பிகளுக்கான ஒரு பாதுகாப்பு பயனர் வழிகாட்டல் ஆவணத்தை தயாரிப்பதற்கு தீர்மானித்தது. வரைவு வழிகாட்டல் ஆவணத்தை தயாரிக்கும் பணி 2020 ஆம் ஆண்டில் நிறைவு செய்யப்பட்டது.

பாதுகாப்பான மின்சார வேலிகளுக்கான ஒழுங்குவிதி அல்லது விதிமுறை - (AP20/CP/INS/04)

களவிலிருந்து பாதுகாப்பதற்கான நடவடிக்கையாக அமைக்கப்பட்டுள்ள ஏனைய தரப்புகளின் வீட்டு வளாக எல்லைகளின் ஓரமாக நிறுவப்பட்டிருக்கின்ற மின்னோட்டமுடைய வேலிகளினால் தமது பாதுகாப்பு தடைப்பட்டுள்ளதாக தெரிவிக்கின்ற வாடிக்கையாளர்களிமிருந்து அதிகமான முறைப்பாடுகள் 2018 ஆம் ஆண்டு காலப் பகுதியில் இலங்கைப் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவுக்கு (இபொபஆ) கிடைத்தன. பாதுகாப்பான மின்சார வேலிகள் தொடர்பான ஒரு ஒழுங்குவிதி இலங்கையில் காணப்படுவதாக கண்டறியப்பட்டது.

ஆகையால், மக்களினதும் மற்றும் அவர்களின் உடமைகளினதும் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் விதத்தில்

வாடிக்கையாளர் வளாகங்களின் எல்லைகள் ஓரமாக நிறுவப்பட்டிருக்கின்ற மின்சார வேலிகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கான ஒரு ஒழுங்குவிதியை இபொபஆ பொருத்தமான அதிகார சபைகளுடனும் மற்றும் அக்கறையுடைய தரப்புகளுடனும் இணைந்து தொழிற்பட்டு தயாரித்துள்ளது. குறித்த ஒழுங்குவிதியின் முதலாவது வரைவு ஆவணத்தை தயாரிக்கும் பணி 2020 ஆம் ஆண்டில் நிறைவு செய்யப்பட்டது.

IET ஒழுங்குவிதிகளுக்கு அமைய வெளிநாட்டு ஒப்பந்த தரப்புகளினால் மேற்கொள்ளப்படும் நிர்மாண கருத் திட்டங்களினது மின்சார நிறுவுகைகளின் அனுசரிப்புத்தன்மையை உறுதிப்படுத்தல் - (AP20/RU/INS/18)

இலங்கை மக்களினதும் மற்றும் வெளிநாட்டவர்களினதும் பல வகை வீடமைப்பு தேவைகளுக்கு உதவும் வகையில் நிர்மாணிக்கப்படுகின்ற புதிய கூட்டுஆதன நிர்மாண வசதிகளின் மூலமாக வருடாந்தம் இலங்கையின் ரீல் எஸ்ட்ரேட்டு சந்தை அதிகரித்து வருகின்றது. கட்டிடவறைகள் அல்லது கூட்டுஆதன வசதிகளை நிர்மாணிக்கும் போது மின்சார கம்பிணைப்பு நிறுவுகையின் நிமித்தம் இலங்கை IET தர நியமத்தை பின்பற்றுகின்றது. எனினும், சில சந்தர்ப்பங்களில் இந்த ஒழுங்குவிதி பின்பற்றப்படவில்லை என்பதை இபொபஆ கண்டறிந்துள்ளது. ஆகையால், 2020 ஆம் ஆண்டில், இபொபஆ குறித்த ஒழுங்குவிதியை பின்பற்றி செயற்படுத்தும் பொருட்டு சகல அக்கறையுடைய தரப்புகளுக்கும் உதவக் கூடிய நிர்மாண கருத் திட்டங்களுக்கு பொருத்தமான ஒழுங்குவிதியை செயற்படுத்துவதும் மற்றும் தகவல்களை பரப்புவதும் பற்றி பொருத்தமான சகல அக்கறையுடைய தரப்புகளுடனும் ஒரு கலந்துரையாடலை நடத்தியது.

அதற்கு மேதிகமாக, இபொபஆ 2020 ஆம் ஆண்டில் மூன்று (03) ஸ்தல சோதனையிடுகளை மேற்கொண்டு, நிர்மாண கருத் திட்டங்கள் பற்றி கூட்டுஆதன அதிகார சபைக்கு அறிவுறுத்தியது.

மின்சார அனுமதிப் பத்திரம் பெற்ற தரப்புகளின் மின்சார செலுத்துகை மற்றும் மின்சார பகிர்ந்தளிப்பு முறைமையின் ஊடாக மின்சாரத்தை கள்ளத்தனமாக பிரித்தெடுக்கும் அல்லது பயன்படுத்தும் நபர்களுக்கு எதிராக வழக்கு தொடர்வதற்கான அங்கீகாரங்கள் சிபாரிசு - (AP20/RU/INS/19)

2009 இன் 20 ஆம் இலக்க (திருத்தல்) இலங்கை மின்சார சட்டத்தின் 48 (4) ஆம் உப பிரிவின் பிரகாரம், இலங்கைப் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் எழுத்திலான அங்கீகாரத்துடன் அன்றி, குறித்த சட்டத்தின் கீழ் புரியப்படும் ஒரு குற்றத்திற்கு எதிரான எந்தவொரு வழக்குத்தாக்கலையும் நீதிவான் நீதிமன்றங்களின் நீதிமன்ற நடவடிக்கையில் செய்ய முடியாது.

2020 ஆம் ஆண்டில், இபொபஆ குழுவுக்கு அத்தகைய அங்கீகாரத்தின் நிமித்தம் 542 விண்ணப்பங்கள் கிடைத்தன. சகல விண்ணப்பங்களும் மதிப்பீடு செய்யப்பட்டு தேவையானவிடத்தும் தேவையான போதும் தேவையான அங்கீகாரங்கள் வழங்கப்பட்டன.

மின்சார நுகர்வோர்களிடமிருந்து கிடைக்கும் வேண்டுகோளின் அல்லது ஆணைக்குழுவின் மூலம் கிடைக்கும் பணிப்புரைகளின் பேரில் மின்சார மார்க்கங்களை அல்லது மின்னுற்பத்தி பொறித் தொகுதிகளை அல்லது மின்சார விநியோகத்தை சோதனையிடுதல், பரிசோதித்தல் - (AP20/RU/INS/20)

இலங்கை மின்சார சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்டுள்ள சட்டஏற்பாடுகள், ஒழுங்குவிதிகள் அல்லது விதிமுறைகள் மின்சார வாடிக்கையாளர்களினாலும் மற்றும் பொது மக்களினாலும் மீறப்படுவதனால் எழுகின்ற பிணக்குகளையும் மற்றும் மின்சார அனுமதிப் பத்திரம் பெற்ற தரப்புகளுக்கும், மின்சார வாடிக்கையாளர்களுக்கும் மற்றும் பொது மக்களுக்கும் இடையில் மின்சார அபிவிருத்தி சம்பந்தமாக எழுகின்ற பிணக்குகளையும், இபொபஆ விசாரணை (மின்சார சட்டத்தின் 2 ஆம் பிரிவின் பிரகாரம் (மின்சார பரிசோதகர்களினது தொழிற்பாடுகள், கடமைகள் மற்றும் நடைமுறைகள்) ஒழுங்குவிதி - 2015) செய்யும்.

2020 ஆம் ஆண்டில், இபொபஆ குழுவினால் இது தொடர்பாக 18 சோதனையிடுகைகள் மேற்கொள்ளப்பட்டன.

மின் சொக்கெட்டுக்களினதும் மற்றும் மின்னாப்புகளினதும் நியமம்

இலங்கையில் ஏற்படும் மின்சார அதிர்ச்சியை குறைப்பதற்கும் மற்றும் மின்சார பாதுகாப்பை மேம்படுத்துவதற்குமான முயற்சியைக் கொண்டு இபொபஆ பல அதிகார சபைகளுடனும் மற்றும் சங்கங்களுடனும் இணைந்து தொடர்ந்து பணியாற்றி வருகின்றது.

2020 ஆம் ஆண்டில், இபொபஆ அதிக பாதுகாப்புடைய மின்சார நீட்டிப்பு நாணை வடிவமைத்து தயாரிப்பதற்கும் மற்றும் அதன் மாதிரியை தயாரிப்பதற்கும் மொரட்டுவ பல்கலைக்கழகத்துடன் ஒரு ஒப்பந்தத்தை செய்து கொண்டதன் மூலம், உள்நாட்டில் உற்பத்தியாகும் மின் சொக்கெட்டுகளுக்கும் மற்றும் மின்னாப்புகளுக்கும் தேவையான மூலப்பொருட்களை மேலும் அதிகரிப்பது மற்றுமொரு முன்னோக்கிய நடவடிக்கையை எடுத்தது.

விண்ணப்ப செயல்முறை, தகைமை தகவுதிறன், இரத்துச்செய்யும் செயல்முறை, பொறுப்புக்கள் மற்றும் பொறுப்புக்கூறல் என்பன அடங்கலாக இலங்கையிலுள்ள மின்னியலாளர்களுக்கு அனுமதிப் பத்திரங்களை வழங்குவதற்கான ஒரு வழிகாட்டியையும் இபொபஆ தாபித்தது.

பலன்கள் 04

மனிதனுக்கும், விலங்குகளுக்கும் மற்றும் தாவரங்களுக்குமான மேம்பட்டுள்ள சுற்றாடல் நிலைமைகள்

மீளப்புதுப்பிக்கத்தகு சக்தி அபிவிருத்தி ஊக்குவிப்பு

மின்சார உற்பத்தி மற்றும் மின்சார செலுத்துகை திட்டமிடல் தொடர்பான தீர்மானங்களை எடுப்பதற்கு, மீளப்புதுப்பிக்கத்தகு சக்தி அனுப்புகை தரவுகள் பதிவு மிகவும் முக்கியமானதாகும். நியாயமான கால இடைவெளிகளில் உண்மையான மீளப்புதுப்பிக்கத்தகு சக்தி அனுப்புகை பதிவில் தற்பொழுது ஒரு இடைவெளி காணப்படுகின்றது. ஏற்கெனவேயிருக்கின்ற அனுமதிப் பத்திர தகவல் சமர்ப்பித்தல் முறைமையின் உதவியுடன் தரவு சமர்ப்பண மென்பாக பிரயோக முறை தயாரிக்கப்பட்டது.

லக்விஜய மின்னுற்பத்தி நிலையத்தின் சுற்றாடல்நேய செயலாற்றுகையை கண்காணித்தல்

இந்த ஆணைக்குழு நியமித்த நிபுணத்துவ குழு தயாரித்த சுற்றாடல் தாக்க தணிப்பு செயல் திட்டத்தை செயற்படுத்தும் விடயம் கண்காணிக்கப்பட்டது. குறித்த செயல் திட்டத்தின் செயற்படுத்துகையின் அடிப்படையில் கனிசமானளவு முன்னேற்றம் அடைந்துள்ளமையையும் மற்றும் மின்னுற்பத்தி நிலைய செயற்பாடுகளினால் ஏற்படும் பாதகமான தாக்கங்களை குறைப்பதற்கு முடிந்துள்ளமையையும் காணக் கூடியதாகவுள்ளது. மத்திய சுற்றாடல் அதிகார சபையினாலும் மற்றும் மாகாண சுற்றாடல் அதிகார சபையினாலும் விதிக்கப்பட்டுள்ள ஒழுங்குவிதிகளுக்கு இணங்க லக்விஜய மின்னுற்பத்தி நிலையத்தின் சுற்றாடல் செயலாற்றுகை கண்காணிக்கப்பட்டது.

அனல் சக்தி மேலதிக் கிரயங்கள் அக்கறையுடைய தரப்பு ஆலோசனை

வளி மாசு, நீர் மாசு, நச்சு மூலப்பொருட்களும் புர்பு புகைகளும் வெளியாகுதல் முதலியன அடங்கிய அதிகளவான தாக்கங்கள் அதிகரிப்பதற்கு மின்னுற்பத்தி செயற்பாடு வழிவகுக்கும். இந்த சமூக சுற்றாடல் கிரயங்கள் மேலதிக கிரயங்களாக குறிப்பீடு செய்யப்படுகின்றன. ஈடுபடுத்த வேண்டிய மின்னுற்பத்தி தொழில் நுட்பங்களுக்கான ஆகக்குறைந்த பொருளாதார கிரயத்தை புரிந்து கொள்ளும் பொருட்டு இந்த கிரயங்கள் சரியானளவில் கணிக்கப்படுதல் வேண்டும்.

மேற்குறித்த நிரலில், இலங்கையில் 'அனல் சக்தி மேலதிக கிரய மதிப்பீடு' பற்றிய ஒரு அக்கறையுடைய தரப்பு ஆலோசனை கூட்டத்தை இந்த பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு நடத்தியது. எழுத்திலான சமர்ப்பணங்கள் சேகரிக்கப்பட்டு மேலும் மதிப்பீடு செய்யப்பட்டு இறுதி அறிக்கையில் கூட்டிணைக்கப்பட்டன. இந்த ஆராய்ச்சி இந்த தன்மையில் முதல் தடவையாக மேற்கொள்ளப்பட்டுள்ளதால் இது சமூகத்திற்கு புதிய அறிவை கொண்டுசேர்க்கும்.

மின்சாரத்தின் வினைத்திறன் பாவனையை ஊக்குவித்தலும் மற்றும் மின்சாரத்தை பாதுகாத்து சேமித்தலும்

நாட்டின் பொருளாதார அபிவிருத்தியின் காரணமாக சக்திக்கான கேள்வி நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது. எனினும், மின்சக்திற்கான கேள்வி அதிகரிப்புக்கு ஏற்ப சக்தி விநியோகம் அதிகரிப்பதில்லை. சக்தி வினைத்திறனும் மற்றும் சக்தியை பாதுகாத்து சேமிப்பதும் இந்த இடைவளியை குறைப்பதில் பெரிதும் உதவும்.

மேற்குறித்த கண்ணோட்டத்தில், இலங்கைப் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு 2020 ஆம் ஆண்டு காலப் பகுதியில் சமூக ஊடக தளங்கள் மற்றும் இணையத்தள ஊடகம் ஆகியவற்றின் ஊடாக வீட்டு, வர்த்தக மற்றும் கைத்தொழில் வாடிக்கையாளர் தரப்புகளை உள்ளடக்கி சக்தி வினைத்திறனும் மற்றும் சக்தியை பாதுகாத்து சேமித்தலும் பற்றிய ஒரு விழிப்புணர்வு பிரச்சார நிகழ்ச்சித் திட்டத்தை நடத்தியது.

பெற்றோலியத் துறை



உராய்வுநீக்கி எண்ணெய்கள் சந்தை பற்றிய அறிக்கை

2020 ஆம் ஆண்டில், இபொபஆ 2019 ஆம் ஆண்டிற்கான உராய்வுநீக்கி எண்ணெய்கள் சந்தை பற்றிய அறிக்கையை வெளியிட்டதுடன் தொழில் நுட்ப கல்லூரிகளின் நிமித்தம் விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்களையும் நடத்தி உராய்வுநீக்கி எண்ணெய்கள் தொடர்பான ஒப்பந்தங்கள் புதுப்பித்தலை ஒருங்கிணைப்பும் செய்தது.

2019 ஆம் ஆண்டிற்கான உராய்வுநீக்கி எண்ணெய்கள் பற்றிய அறிக்கைக்கு இணங்க, உராய்வுநீக்கி எண்ணெய்களை இறக்குமதி செய்யவும், ஏற்றுமதி செய்யவும், விற்பனை செய்யவும் அல்லது பகிர்ந்தளிக்கவும் பதினொரு (11) தரப்புகளுக்கு (கம்பனி / பெயர்குறித்த நிறுவனம்) இலங்கைப் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு அதிகாரம் அளித்தது. மேலும் விசேட வணிகப் பெயரிலான உராய்வுநீக்கி எண்ணெய்யை (களை) இறக்குமதி செய்யவும், ஏற்றுமதி செய்யவும், கலக்கவும், உற்பத்தி செய்யவும், விற்பனை செய்யவும், விநியோகிக்கவும் அல்லது பகிர்ந்தளிக்கவும் மூன்று (3) தரப்புகளுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளன.


2019 ஆம் ஆண்டு காலப் பகுதியில் விற்பனை செய்யப்பட்டுள்ளதாக பதிவாகியுள்ள உராய்வுநீக்கி எண்ணெய்களின் அளவு 62,481 கிலோ லீற்றர்களாகும். இந்த அளவானது, 2018 ஆம் ஆண்டின் அளவுடன் ஒப்பிடும் போது 1,786 கிலோ லீற்றர்கள் குறைவானதாகும். எனினும், 2019 ஆம் ஆண்டு காலப் பகுதியில் விற்பனை செய்யப்பட்டுள்ள மொத்த உராய்வுநீக்கி எண்ணெய்களின் அளவு 28.37 பில்லியன் ரூபாவாகும். இது 2018 ஆம் ஆண்டின் அத்தகைய தொகையை விடவும் 1.03 பில்லியன் ரூபா அதிகமானதாகும். அதற்கு இணங்க, 2019 ஆம் ஆண்டு காலப் பகுதியில், உராய்வுநீக்கி எண்ணெய்கள் சந்தை அதன் விற்பனையில் ஒரு வீழ்ச்சி பதிவாகியுள்ளது. 2018 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது அதன் அளவு 2.78% வீதமாகும்.

மேலும், உராய்வுநீக்கி எண்ணெய்களின் மொத்த விற்பனையில் ஒரு பாதகமான அதிகரிப்பை 2017, 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டு காலப் பகுதிகளில், சந்தையில் அவதானிக்க முடியும். 2019 ஆம் ஆண்டு காலப் பகுதியில், விற்பனை செய்யப்பட்டுள்ள வாகனங்களுக்கான உராய்வுநீக்கி எண்ணெய்களினதும் மற்றும் உராய்வுநீக்கி கொழுப்புகளினதும் அளவு 4.87% வீதத்தாலும் மற்றும் 9.92% வீதத்தாலும் குறைந்துள்ளது. மேலும் 2018 ஆம் ஆண்டு காலப் பகுதியில் பதிவாகிய அத்தகைய உற்பத்திகளின் விற்பனையுடன் ஒப்பிடும் போது, விற்பனை செய்யப்பட்டுள்ள கைத்தொழில் உராய்வுநீக்கி எண்ணெய்களினதும் மற்றும் கப்பல் உராய்வுநீக்கி எண்ணெய்களினதும் அளவு முறையே 3.82% வீதத்தாலும் 10.70% வீதத்தாலும் அதிகரித்துள்ளது.

2019 ஆம் ஆண்டு காலப் பகுதியில், விற்பனை செய்யப்பட்டதாக பதிவாகியுள்ள வாகனங்களுக்கான உராய்வுநீக்கி எண்ணெய்களின் மொத்த அளவு 44,950.47 கிலோ லீற்றர்களாகும். அந்த அளவானது 2018 ஆம் ஆண்டின் அத்தகைய அளவை விடவும் 2301.33 கிலோ லீற்றர்கள் குறைவானதாகும். விற்பனை செய்யப்பட்டுள்ள வாகனங்களுக்கான உராய்வுநீக்கி எண்ணெய்களின் மிகவும் குறைந்த அளவானது, 2019 ஆம் ஆண்டு காலப் பகுதியில் விற்பனை செய்யப்பட்டதாக பதிவாகியுள்ள உராய்வுநீக்கி எண்ணெய்களின் அளவில் பாதகமான அதிகரிப்புக்கு அதிகளவில் பங்களித்துள்ளது. ஆகையால், வாகனங்களுக்கான உராய்வுநீக்கி எண்ணெய்கள் 2015 ஆம் ஆண்டிலிருந்து மாற்றம் அடைந்து சாதகமாக அதிகரித்துள்ளதை 2019 ஆம் ஆண்டு காலப் பகுதியில் அவதானிக்கக் கூடியதாகவுள்ளது.

மேலும், 2019 ஆம் ஆண்டு காலப் பகுதியில் விற்பனை செய்யப்பட்டுள்ள டீசல் என்ஜின் எண்ணெய்யின் (தனி தரம்) அளவு, 2018 ஆம் ஆண்டில் விற்பனை செய்யப்பட்டுள்ள அத்தகைய அளவுடன் ஒப்பிடும் போது சுமார் 10% வீத்தினால் (1,500 மடு) அதாவது கணிசமாக குறைவடைந்துள்ளது. இதே நேரம் 2018 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது, விற்பனை செய்யப்பட்டுள்ள டீசல் என்ஜின் எண்ணெய் (பல தரம்), நான்கு ஸ்ட்ரோக் மோட்டார் சைக்கில் எண்ணெய், இரண்டு ஸ்ட்ரோக் மோட்டார் சைக்கில் எண்ணெய், தானியக்க ஜியர் எண்ணெய் மற்றும் தானியக்க பரிவர்த்தனை எரிபொருள் ஆகியவற்றின் விற்பனை செய்யப்பட்டுள்ள அளவு கனிசமாக அதிகரித்துள்ளது. கடந்த மூன்று வருட காலப் பகுதியில் விற்பனை செய்யப்பட்டுள்ள டீசல் என்ஜின் எண்ணெய்யின் (தனி தரம்) அளவு குறைந்துள்ளது. இதே வேளையில் விற்பனை செய்யப்பட்டுள்ள காசோலைன் என்ஜின் எண்ணெய்யின் (பல தரம்) அளவு குறித்த அதே காலப் பகுதியில் அதிகரித்துள்ளது.

உராய்வுநீக்கி எண்ணெய்கள் சந்தை 2019 - ஒரேபார்வை



உராய்வுநீக்கி எண்ணெய்களுக்கான இலங்கை நியமங்களை மீளாய்வு செய்து இற்றைப்படுத்தல் - (AP20/CP/REA/02)

அரசாங்கம் உராய்வுநீக்கி எண்ணெய்களின் சந்தையை ஒழுங்குறுத்துவதற்காக இபொபஆ ஐ ஒரு நிழல் ஒழுங்குறுத்துகை தரப்பாக நியமித்துள்ளது. சட்டவாக்கங்கள் தற்பொழுது பூர்த்தியடையாத நிலையிலுள்ளன. இந்த சட்டவாக்கங்கள் கீழ்நிலை பெற்றோலிய கைத்தொழிலை முழுமையாக ஒழுங்குறுத்துவதற்கு இபொபஆ ஐ இயலச் செய்யும். உராய்வுநீக்கி எண்ணெய்கள் சந்தையின் நிழல் ஒழுங்குறுத்தும் தரப்பு என்ற ரீதியில், இபொபஆ உராய்வுநீக்கி எண்ணெய்கள் கைத்தொழிலை தாராளமயப்படுத்துவது பற்றிய கொள்கைகள் மற்றும் ஒழுங்குறுத்துகை விடயங்கள் தொடர்பாக பெற்றோலிய கைத்தொழில்கள் அமைச்சுக்கு ஆலோசனை வழங்குகின்றது.

2006 ஆம் ஆண்டில் உராய்வுநீக்கி எண்ணெய்கள் சந்தையை மேலும் தாராளமயப்படுத்தி போது, இபொபஆ சந்தைக்கு அனுமதிக்கப்படும் சர்வதேச ரீதியில் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ள நியமங்களை அனுசரிக்கின்ற தரமான உராய்வுநீக்கி எண்ணெய்களை மாத்திரம் உறுதிப்படுத்துவதற்கான சந்தைப் பிரவேச தகவுதிறனையும் மற்றும் கொள்கை வேலைச்சட்டகத்தையும் வகுத்தமைப்பதில் பெற்றோலியக் கைத்தொழில்கள் அமைச்சுக்கு உதவியதுடன் ஆலோசனைகளையும் வழங்கியது.

ஆகையால், 2020 ஆம் ஆண்டில், அக்கறையுடைய தரப்புகளுடன் ஆலோசனைகள் கேட்டறியும் கூட்டங்களை நடத்திய பின்னர், தேவையானவாறு விமான எரிபொருள் (சேசோலைன்), டீசல், மண்ணெண்ணெய் மற்றும் திரவநிலை பெற்றோலிய எரிவாயு ஆகியவற்றுக்கு தற்பொழுதிருக்கின்ற ஐந்து இலங்கை நியமங்களை மீளாய்வு செய்வதற்காகவும் மற்றும் இற்றைப்படுத்துவதற்காகவும் இபொபஆ ஒருங்கிணைப்பு பணியை மேற்கொண்டது.

அதிகாரமளிக்கப்படாத கலப்பு உராய்வுநீக்கி எண்ணெய்களுக்கு எதிரான நாடளாவிய சுற்றிவளைப்புகள்

இலங்கையின் உராய்வுநீக்கி எண்ணணெய்கள் சந்தையில், கலப்பு உராய்வுநீக்கி எண்ணெய்கள் இருப்பதாகவும் அந்த கலப்பு உராய்வுநீக்கி எண்ணெய்களின் கலப்பு மொத்த சந்தையில் சுமார் 20 வீதமாக காணப்படுவதாகவும் விரிவான ஒரு பகுப்பாய்வின் ஊடாக கண்டறியப்பட்டது. சந்தையில் அத்தகைய கலப்பு உராய்வுநீக்கிகள் காணப்படுவதற்கான முக்கிய காரணங்களில் ஒரு காரணம் யாதெனில் இலங்கையின் சந்தைக்கு அனுமதிக்கப்படாத கலப்பு உராய்வுநீக்கி எண்ணெய்கள் பகிர்ந்தளிக்கப்படுவதாகும்.

சந்தையில் தரம் குறைந்த உராய்வுநீக்கி எண்ணெய்கள் இருப்பதாக கூறி நுகர்வோர் செய்யும் முறைப்பாடுகளின் அதிகரிப்பின் காரணமாக, இலங்கைக்கு உராய்வுநீக்கி எண்ணெய்கள் இறக்குமதி செய்யப்படுவதையும், உற்பத்தி செய்யப்படுவதையும், பகிர்ந்தளிக்கப்படுவதையும் மற்றும் உராய்வுநீக்கி எண்ணெய்களும் அந்த உராய்வுநீக்கி எண்ணெய்களுடன் தொடர்புடைய உற்பத்திகளும் விற்பனை செய்யப்படுவதையும் பற்றி, மின்சக்தி அமைச்சினதும் மற்றும் நுகர்வோர் விவகாரங்கள் அதிகார சபையினதும் (நு.வி.அ.ச.) ஒத்துழைப்புடன் விசாரணை செய்வதற்கு, இபொபஆ தீர்மானித்தது. அதற்கு அமைவாக, நு.வி.அ.ச. உதவியுடன் இபொபஆ

இன் மூலம் நாடளாவிய ரீதியில், சட்டமுறையற்ற உராய்வுநீக்கி உற்பத்திகளுக்கு எதிராக திடீர் சோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

22 வணிகப் பெயர்களில் காணப்படும் உராய்வுநீக்கி எண்ணெய்களையும் மற்றும் அந்த உராய்வுநீக்கி எண்ணெய்களுடன் தொடர்புடைய உற்பத்திகளையும் இறக்குமதி செய்யவும், அத்தகைய உராய்வுநீக்கி எண்ணெய்களையும் பொருட்களையும் உற்பத்தி செய்யவும், பகிர்ந்தளிக்கவும் மற்றும் விற்பனை செய்யவும் பெற்றொலிய வளங்கள் அபிவிருத்தி செயலகம் (பெ.வ.அ.செ.) சட்டமுறையான அங்கீகாரத்தை வழங்கியுள்ளது. எனினும், அதிகாரம் அளிக்கப்படாத வணிகப் பெயர்களில் பல உராய்வுநீக்கி எண்ணெய்கள் காணப்படுவதாகவும் மற்றும் இலங்கை சந்தையில் அத்தகைய அதிகாரமற்ற பல உற்பத்திகளை சந்தைப்படுத்தும் கம்பனிகள் சந்தையில் இருப்பதாகவும் கண்டறியப்பட்டது. இந்த உற்பத்திகள் மிகவும் தரம் குறைந்த உற்பத்திகள் என கண்டறியப்பட்டுள்ளன. இந்த உற்பத்திகளின் பாவனை, வாகன என்ஜின்கள் குறுகிய ஒரு காலப் பகுதியில் பழுதடைவதற்கு காரணமாக அமைந்துள்ளது. இதனால் அதிக விலை கொடுத்த உதிரிப்பாகங்களை இறக்குமதி செய்ய இது விளைவாக அமையலாம். ஆகையால், இதன் விளைவாக நாட்டின் அந்நியசெலாவணியில் இது தாக்கத்தை செலுத்தும். இந்த உராய்வுநீக்கி எண்ணெய்களை நுகர்கின்றவர்கள் இந்த அடிக்கடி நிகழும் தொழில் நுட்ப தவறுகளினால் அதிகளவில் பாதிக்கப்படுகின்றனர். இதே நேரம், தரம் குறைந்த இந்த சட்டமுறையற்ற உராய்வுநீக்கி எண்ணெய்களின் சந்தை விரிவாக்கத்தினால் இலங்கை அரசாங்கமும் மிகப் பெரிய அளவான வரியை இழந்திருந்தது.

நு.வி.அ.ச. நாடளாவிய ரீதியில் சுற்றிவளைப்புகளை மேற்கொண்டதன் ஊடாக அதிகளவான சட்டமுறையற்ற உராய்வுநீக்கி எண்ணெய்களையும் உற்பத்திகளையும் கைப்பற்றியுள்ளது.

உராய்வுநீக்கி எண்ணெய்கள் கைத்தொழில் சந்தை பகுப்பாய்வு அறிக்கை - AP20/CP/TEA/04

உராய்வுநீக்கி எண்ணெய்கள் கைத்தொழிலின் நிழல் ஒருங்குறுத்துகை தரப்பாக தொழிற்பட்டு வருகின்ற இந்த இபொபஆ, பெற்றோலிய கைத்தொழில்களின் ஒழுங்குறுத்துகை தொடர்பாக பெற்றோலிய வளங்கள் அமைச்சுக்கு ஆலோசனைகளை வழங்கி வருகின்றது. ஆகையால், போட்டி, விலை மற்றும் தரம் என்பவற்றின் அடிப்படையில், தற்பொழுது காணப்படுகின்ற சந்தை செயலாற்றுகையை மதிப்பிடுவதற்கு அண்மை ஆண்டுகளில், உராய்வுநீக்கி எண்ணெய்களின் சந்தைத் தரவுகள் பற்றிய ஒரு பகுப்பாய்வை மேற்கொள்வது அவசியமாகும். உராய்வுநீக்கி எண்ணெய்களின் சந்தைத் தரவுகள் வருடாந்தம் சந்தைத் தரப்புகளினால் சமர்ப்பிக்கப்படுகின்றன. இந்தத் தரவுகள் உராய்வுநீக்கி சந்தைகளின் வருடாந்த அறிக்கையாக தொகுக்கப்படுகின்றன. உராய்வுநீக்கி எண்ணெய்கள் சந்தையின் செயலாற்றுகையை பகுப்பாய்வு செய்யும் பொருட்டு சந்தைப் புள்ளிவிபரங்கள் விரிவாக ஆராயப்பட்டன. மிகவும் சிறந்த விழிப்புணர்வை அடைந்து கொள்ளும் பொருட்டு சந்தைத் தரப்புகளிடமிருந்தும் மற்றும் ஏனைய அக்கறையுடைய தரப்புகளிடமிருந்தும் மேலதிக விபரங்கள் அழைக்கப்பட்டன. குறித்த அறிக்கை 2020 ஆம் ஆண்டில் தொகுக்கப்பட்டது.

நீர் சேவைத் துறை



நீர் சார்ந்த நுகர்வோருக்கான உரிமைகளும் மற்றும் கடப்பாடுகளும் பற்றிய கூற்று

நீர் சார்ந்த சேவைகள் கைத்தொழிலின் நுகர்வோருக்கான உரிமைகளும் மற்றும் கடமைகளும் பற்றிய கூற்று ஆவணம், சரியான வேலைச்சட்டகத்தில் பிரச்சினைகளை தீர்ப்பதற்கு சகல அக்கறையுடைய தரப்புகளுக்கும் உதவக் கூடிய வகையில், தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையுடனும் (தேநீவவச) மற்றும் ஏனைய பொருத்தமான அக்கறையுடைய தரப்புகளுடனும் இணைந்து இபொபஆ ஆல் தயாரிக்கப்பட்டு தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபைக்கு (தேநீவவச) சமர்ப்பிக்கப்பட்டது.

நீர் விநியோகம் மற்றும் நீர்ப் பாவனை மற்றும் கழிவுநீர் சேகரிப்பு ஆகியன பற்றி, நீர் நுகரும் நபரின் அடிப்படை உரிமைகளையும், நீர் விநியோகம் மற்றும் நீர்ப் பாவனை மற்றும் கழிவுநீர் சேகரிப்பு ஆகியன தொடர்பாக அந்த நீர் நுகரும் நபருக்கு இருக்கின்ற அடிப்படை கடமைகளையும், ஒரு மின்சார இணைப்புக்கு விண்ணப்பிக்கும், ஒரு மின்சார இணைப்பை துண்டிக்கும் மற்றும் ஒரு மின்சார மீளிணைப்பை வழங்கும் போதும், பாதுகாப்பு வைப்புத் தொகையை வைப்பிலிடும், மாணிவாசிப்பை நிறுவும் மற்றும் மாணிவாசிப்பை கணிக்கும் போதும் பின்பற்ற வேண்டிய விதிமுறைகளையும் இந்தக் கூற்று ஆவணம் உள்ளடக்குகின்றது.

குறித்த இந்தக் கூற்று ஆவணம் தேவையான அங்கீகாரத்தின் நிமித்தம், நீர் விநியோக அமைச்சுக்கு கையளிக்கப்பட்டது.

நீர் சார்ந்த நுகர்வோரின் பிரச்சினைகள் பற்றி நடந்த பொது மக்கள் ஆலோசனை கேட்டறியும் செயல்முறை

பொது கழிவு நீர் வசதிகள் மற்றும் பவுசர் ஊடான நீர் விநியோகம் உள்ளடங்கலாக ஏதாவது நகர அல்லது கிராம புறத்தில், ஏதாவது ஒரு பொது நீர் விநியோக முறைமையிலிருந்து குழாய்மார்க்கம் மூலமான நீர் விநியோகம் ஆகியவற்றை உள்ளடக்குகின்ற நீர் சார்ந்த சேவைகள் கைத்தொழில், இபொபஆ சட்டத்தின் அட்டவணையிலும் ஒரு கைத்தொழிலாக உள்ளீர்க்கப்பட்டுள்ளது.

ஆகையால், இபொபஆ இன் தொழிற்பாடுகளும் மற்றும் அதிகாரத் தத்துவங்களும் நீர் சார்ந்த சேவைகள் கைத்தொழிலுக்கும் நீடிக்கப்பட்டுள்ளன. எனினும், குறித்த அட்டவணையில் பட்டியல்படுத்தப்பட்டுள்ள ஏதாவது கைத்தொழில்களின் பேரில் இபொபஆ சட்டத்தின் முழுமையான தொழிற்பாடு அந்தக் கைத்தொழிலின் ஒழுங்குறுத்துகை பணியை ஆரம்பிப்பதற்கான ஒரு முற்றேவைப்பாடாக விளங்குகின்ற ஒரு கைத்தொழில் சட்டத்தின் சட்டவாக்கத்தை தொடர்ந்து ஆரம்பமாகுகின்றது.

இந்த சூழ்நிலையில், குடிநீர் சம்பந்தமான சகல பிரச்சினைகளையும் உள்ளடக்குகின்ற கொள்கை ஆலோசனை ஆவணத்தை தயாரிப்பதற்கு இபொபஆ சான்று அடிப்படையிலான அணுகுமுறையை தேர்ந்தெடுத்து, முதல் கட்டமாக வடமேல் மாகாணம், தென் மாகாணம், மத்திய மாகாணம், கிழக்கு மாகாணம் ஆகிய மாகாணங்களில், பொது மக்களிடம் ஆலோசனைகள் கேட்டறியும் கூட்டங்களை நடத்தியது. இந்த ஆலோசனை கேட்டறியும் செயல்முறை நீர் சார்ந்த சேவைகளில் காணப்படும் பொதுவான மற்றும் மாவட்ட ரீதியான பிரச்சினைகள் பற்றிய ஒரு இடைக்கால அறிக்கையை வெளியிடுவதற்கு பயனாக அமைந்தது.

குடிநீருடன் தொடர்புடைய பிரச்சினைகளுக்கான அடிப்படை காரணங்களை அறிந்து கொள்ளும் பொருட்டு குழுவை இலக்காகக் கொண்டமைந்த கலந்துரையாடலின் நிமித்தம் இபொபஆ கிராமிய தலைவர்களை சந்திப்பதற்காக கிராமங்களுக்கும் சென்றது.

இந்த இடைக்கால அறிக்கை வடமேல் மாகாணம், தென் மாகாணம் மற்றும் மத்திய மாகாணம் ஆகிய மாகாணங்களில் காணப்படுகின்ற குடிநீருடன் சம்பந்தமான பிரச்சினைகளையும் மற்றும் ஒவ்வொரு பிரச்சினை தொடர்பாக எடுக்க வேண்டிய தீர்வுகளையும் இனங்கண்டுள்ளது.

இது நீர் வளங்கள் தொடர்பான க'டங்கள், நீர் மற்றும் துப்புரவேற்பாட்டு சேவைகளின் 2025 ஆம் ஆண்டிற்கான இலக்குகளை அடைவதற்கு தேவையான முதலீடுகளின் பற்றாக்குறை ஆகியவற்றை உள்ளடக்குகின்றது. மேலும், சமுதாய அடிப்படையிலான நிறுவனங்கள் (rmep-கள்) தொடர்பான கப்டங்கள் மற்றும் கொழும்பு நகரத்தை மையமாக் கொண்டமைந்த ஒழுங்குறுத்துகை முகவர்நிலையத்துடன் உள்ளூராட்சி மன்றங்கள் (உம CBO- கள்) ஒன்றுடனொன்று தொடர்பு கொள்வதிலுள்ள கப்டங்கள், ஒழுங்குறுத்துகை நோக்கெல்லை, குடிநீர் தரம் பற்றி அதிகரித்து வருகின்ற பிரச்சினைகள், கழிவு நீரையும் மற்றும் கழிவுப் பொருட்களையும் அகற்றுவதற்கு தேவையான வசதிகள் பற்றாக்குறை முதலியனவும் இனங்காணப்பட்டன. வனப் பாதுகாப்பு திணைக்களம் மற்றும் நீர்ப்பாசன திணைக்களம் போன்ற நிறுவனங்களினால் கட்டுப்படுத்தப்படும் மேற்பரப்பு நீர் வளங்களின் பிரவேசத்திற்கான பொறிமுறைத் திட்டங்களை தாபித்தல், குடிநீர் கிடைக்கக் கூடிய நீரேந்துபரப்புகளை பாதுகாப்பது தொடர்பாக சிபாரிசுகளை முன்வைக்கும் முகமாக ஒரு விஞ்ஞான குழுவை நியமித்தல், மழை நீர் சேமிப்பு மற்றும் மழை நீரின் பாவனை முதலியவற்றுக்கான நியமங்களை தயாரிக்கும் வகையில் ஒரு சிறப்புச்செயலணியை தாபித்தல் ஆகிய கருமங்களுக்கும் மற்றும் மத்திய அரசாங்கத்தின் அத்தகைய கருமங்களும் அடங்கலாக பல தீர்வுகளுக்குமான பிரேரணையை இபொபஆ முன்மொழிந்துள்ளது. குடிநீருடன் சம்பந்தப்படுகின்ற சகல மாவட்ட அதிகாரிகளுக்கும் அறிக்கைகள் பகிர்ந்தளிக்கப்பட்டதுடன் அந்த அறிக்கைகள் நீர் சார்ந்த சேவைகள் அமைச்சுக்கும் சமர்ப்பிக்கப்பட்டன.

குடிநீர் பிரச்சினைகள் பற்றி பொது மக்கள் வெளிப்படுத்திய கருத்துரைகள்

இன்று, சுமார் 50% வீதமான மக்களுக்கு மாத்திரமே பாதுகாப்பான குடிநீர் பிரவேசம் இருக்கின்றது.

கௌரவ சனத் நிஷாந்த, பிராந்திய மற்றும் பிரதேச குடிநீர் விநியோக கருத்திட்டங்கள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர்.





நான் குருனாகல் மாவட்டத்திலுள்ள சகல கிராமங்களுக்கும் சென்றுள்ளேன். பாதுகாப்பான குடிநீருக்கு பிரவேசம் இல்லாதிருப்பது நான் கண்டறிந்த பிரதான குறைபாடுகளில் ஒரு குறைபாடாகும். குருனாகல் மாவட்டத்தில் அதிக எண்ணிக்கையான சிறுநீர் நோயாளர்கள் இருப்பதை நாம் பார்க்கின்றோம். தூய்மையான குடிநீர் இல்லாமையானது இந்த சிறுநீர் நோய்களுக்கு காரணமாக அமைகின்றது.

கௌரவ ஏ.ஜே.எம். முஸம்மில், வடமேல் மாகாண ஆளுநர்

எதிர்வரும் 3 ஆண்டுகளில் இலங்கையிலுள்ள அனைவருக்கும் பாதுகாப்பான குடிநீரை பெறுறுக்கொடுக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது. எனவே துறையை ஒழுங்குறுத்துவது அவசியமாகும்.

திரு.ஏ.சி.எம்.ந.'.பீல் மேலதிக செயலாளர் - அபிவிருத்தி, நீர் வழங்கல் அமைச்சு



பாதுகாப்பான குடிநீரை வழங்கல் எனும் விடயத்தில் திறன்வாய்ந்த மனித வளம், அறிவு மற்றும் தொழில்நுட்ப கருவிகளின் குறைபாடு ஆகியன உள்ளூராட்சி நிறுவனத்திற்கு ஒரு சவாலாக விளங்குகிறது.

திரு.ஜ.எம்.ஜ.இளங்ககோன் ஆணையாளர், உள்ளூராட்சி மன்றம் - வட கிழக்கு மாகாணம்



கிராமங்களின் பொது நீர் வழங்கல் திட்டங்களை பரிசோதிப்பதற்கான வசதிகளை ஏற்படுத்தல் சிறப்பானதாகும் மற்றும் குடிநீருக்கான விலை மற்றும் தரம் ஒழுங்குறுத்தப்படல் வேண்டும்.

திரு.நதுன் ஆர்.சம்பத் பணிப்பாளர் - கிராம நீர் வழங்கல் பிரிவு – மாகாண சபை



நீர் சார்ந்த பணிகளை நிறைவேற்றும் நிறுவனங்களுக்கு இடையே முறையான ஒருங்கிணைவு இன்மை பாரிய பிரச்சினையாகும்.

திரு.எம்.எம்.ரசிக சமந்த – அதிகாரி தேசிய சமூக நீர் வழங்கல் திணைக்களம்



சில சந்தர்ப்பங்களில் பிங்கிரிய கிராமத்திலிருந்து நீர் வேறு கிராமங்களுக்கு கொண்டு செல்லப்படுவதால் பிங்கிரிய மக்கள் நீர் இன்றி தவிக்கின்றனர்.

திரு.சரத்சந்திர நவதர்ஷன சமூக அடிப்படையிலான அமைப்பு



நாங்கள் 03 கிராமங்களுக்கு நீரை வழங்குகின்றோம். இதற்கு 8 ஆயிரம் தொடக்கம் 50 ஆயிரம் வரை மின் கட்டணம் வருகிறது. இதனை எம்மால் தாங்கமுடியாது.இதற்கு

எமக்கு நிவாரணம் தேவை. திருமதி. டிமாலி - ரந்திய ஊடமு - கனேவத்த



அக்கறையுடைய தரப்புகளுடன் இணைந்து தொழிற்படுதல்

இலங்கையில் மின்னியலாளர்களுக்கு அனுமதிப்பத்திரம் வழங்குவது தொடர்பான தேசிய வேலைச்சட்டகம் பற்றி விழிப்பூட்டும் நிகழ்ச்சித் திட்டம்

இலங்கையில் சுமார் 40,000 மின்னியலாளர்கள் காணப்படுவதாக இபொபஆ கண்டறிந்துள்ளது. இவர்களில் ஒரு சிலர் மாத்திரமே மின்னியலாளர்களுக்கான தேசிய தொழில் தகைமைக்கு (NVQ) தகுதியுடையவர்களாக காணப்படுகின்றனர். அநேகமான குடும்பங்களினது வீடுகளிலும் மற்றும் ஏனைய வளாகங்களிலும் மின்சார கம்பியிணைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகள், அங்கீரிக்கப்பட்டுள்ள தகைமைகளை கொண்டிருக்காத ஆனாலும் அனுபவமுடைய மின்னியலாளர்களினால் மேற்கொள்ளப்படுகின்றன. இந்தப் பிரச்சினை விடயத்தை அடையாளப்படுத்தும் பொருட்டு, நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையினதும் (நி.கை.அ.அ.ச.), தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழில் பயிற்சி அதிகார சபையினதும் (தே.பி.கை.ப.அ.ச.) மற்றும் வாழ்க்கைத்தொழில் பயிற்சி அதிகார சபையினதும் (வா.ப.அ.ச.) ஒத்துழைப்புடன், இபொபஆ அந்த மின்னியலாளர்களின் தகைமைகளினதும் மற்றும் அனுபவங்களினதும் அடிப்படையில் அனுமதிப் பத்திரங்களை விநியோகித்து, நாட்டில் மின்னியலாளர்களின் நிமித்தம் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ள தொழில் சார்ந்த அந்தஸ்தை நிலைபெறச் செய்வதற்கான ஒரு பொறிமுறைத் திட்டத்தை செயற்படுத்தியது.

இந்த புதிய பொறிமுறைத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டவுடன், அந்த மின்னியலாளர்களின் பணியை தொடர்ந்து மேற்கொள்ளும் வகையில், அந்த சகல மின்னியலாளர்களுக்கும் மூன்று (03) ஆண்டுகளுக்கு மாத்திரம் செல்லுபடியாகும் தற்காலிக அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்படும். தேசிய வாழ்க்கைத்தொழில் பயிற்சி தகைமை 3 (NVQ 3) ஐயும் மற்றும் அதற்கு மேற்பட்ட தகைமையையும் கொண்டுள்ள நபர்கள், குறித்த மதிப்பீட்டு குழுவினால் ஏற்பாடு செய்யப்படும் ஒரு மதிப்பீட்டு பரீட்சையில் தமது அறிவை நிறூபித்த பின்னர், CIDA சபையிடமிருந்து நிரந்தரமான அனுமதிப் பத்திரங்களை பெற்றுக் கொள்வதற்கு தகுதியுடையவர்களாவர். தொழில் ரீதியில் தகுதியற்ற நபர்களாக இருந்தாலும், அனுபவமுடைய நபர்களுக்கு, CIDA சபையினால் ஏற்பாடு செய்யப்படும் ஒரு செயல்முறையின் ஊடாக NVQ மட்டங்களுக்கு தகுதி பெறுவதற்காகவும் மற்றும் அவர்களிடமிருக்கின்ற திறன்களை நிறூபிப்பதற்காகவும் வாய்ப்பு அளிக்கப்படும். அப்போது, தமது திறமைகளை நிறூபிக்கின்ற அத்தகைய நபர்கள் நிரந்தர அனுமதிப் பத்திரங்களுக்கு விண்ணப்பிக்கலாம். நிரந்தர அனுமதிப் பத்திரங்களை பெற்ற பின்னர், அந்த மின்னியலாளர்கள் வீட்டு மின்சார கம்பியிணைத்தல், வயரிங் செய்தல் (30 அம்பியர் தனி பேஸ்), சோதனையிடுதல், முதலிய கரும பணிகளை மேற்கொள்ளலாம் என்பதுடன் இமிச மற்றும் லெகோ நிறுவனம் ஆகியவற்றினால் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ள விதத்தில் மின்சார இணைப்பு வசதியை விண்ணப்பதாரர்கள் பெற்றுக் கொள்ளக் கூடிய வகையில் சான்றிதழ்களை விநியோகிக்கவும் முடியும்.

NVQ தகைமையை பெறுவது பற்றி மின்னியலாளர்களை விழிப்பூட்டும் நோக்கில், முதல் கட்டமாக, 10 மாவட்டங்களை உள்ளடக்கம் 2019 ஆம் ஆண்டில் இபொபஆ ஒரு நாடளாவிய விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டத்தை திட்டமிட்டு நடத்தியது.

இரண்டாம் கட்டமாக மட்டக்களப்பு, யாழ்ப்பாணம், புத்தளம், வவுனியா, கிளிநொச்சி, குருனாகல், மன்னார், முல்லைத்தீவு, இரத்தினபுரி, கேகாலை மற்றும் திருகோணமலை ஆகிய மாவட்டங்களில், 2020 ஆம் ஆண்டில், இபொபஆ 10 விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்களை நடத்தியது.







பொது மக்களை விழிப்பூட்டும் நிகழ்ச்சித் திட்டம் (AP20/RU/INS/17)

மின்சார பாதுகாப்பு வாய்ந்த ஒரு சூழலை உருவாக்குவது பற்றி சகல அக்கறையுடைய தரப்புகளுக்கும் விழிப்பூட்டுவது இபொபஆ வழமையாக மேற்கொள்ளும் தனது கடமைப் பணிகளில் ஒரு பணியாகும். ஆகையால், 2020 ஆம் ஆண்டில், நாடளாவிய ரீதியில் மின்னியலாளர்கள் மற்றும் நுகர்வோர் அடங்கும் ஒரு சிறிய குழுவினரில் நேரடியாக இலக்குக் கொள்கின்ற 09 நிகழ்ச்சித் திட்டங்களை இபொபஆ நடத்தியது. குறித்த நிகழ்ச்சித் திட்டங்களில் பங்குபற்றியவர்கள் முன்வைத்த பிரச்சினைகளுக்கு நேரடியாக தீர்வுகள் வழங்கப்பட்டதுடன், துண்டுப் பிரசுரங்களின் ஊடாக தேவையான தகவல்களும் பகிர்ந்தளிக்கப்பட்டன.

தகல்கள் பகிர்ந்தளிப்பு


2020 ஆம் ஆண்டில், தேவை எழுந்த போது, தேவையான நேரத்திலும் தேவையான இடத்திலும் அக்கறையுடைய தரப்புகளுடன் தகவல்களை பகிர்ந்து கொள்ளும் விடயங்கள் தொடர்பான பல பிரிவுகளில் இபொபஆ 07 ஊடக வெளியீடுகளை வெளியிட்டது. இபொபஆ, 2019 ஆம் ஆண்டிற்கான அதன் வருடாந்த அறிக்கை, 2020 ஆம் ஆண்டிற்கான செயல் திட்டம், உராய்வுநீக்கி எண்ணெய்கள் சந்தை முன்னேற்றம் பற்றி அறிக்கை, மின்னுற்பத்தித் தரவு அறிக்கை, 2020 ஆம் ஆண்டிற்கான சுவுஐ வருடாந்த அறிக்கை, மத்திய வங்கிக்கான அறிக்கை முதலிய அறிக்கைகளையும் வெளியிட்டுள்ளது. இந்தத் தகவல்களை, பாரம்பரிய மற்றும் டிஜிட்டல் ஊடக வசதியின் ஊடாகவும் மற்றும் நேரடி கலந்துரையாடல்களின் ஊடாகவும் இபொபஆ பகிர்ந்தளித்தது.

தகவல்களின் நிமித்தம் 20 எண்ணிக்கைக்கும் அதிகமான கோரல்கள் இபொபஆ இற்கு கிடைத்தன. அந்த சகல கோரல்களுக்கும் பதில்கள் அளிக்கப்பட்டுள்ளன.

இபொபஆ
அதன் பதவியணி

எமது ஊழியர்கள் எமக்கு பெரும் பலம்

எமது திறமுறைத்திட்டத்தின் அடிப்படையில் நாம் பெற்றுக் கொடுக்க வேண்டிய திறன்களை நாம் ஈர்த்து தக்கவைத்துக் கொள்கின்றோமா என்பதை நிச்சயப்படுத்திக் கொள்ளும் பொருட்டு எம்மை சுற்றி மாறிவருகின்ற உலக போக்கு அதிக கேள்வியின் பால் எம்மை தள்ளிவிடுகின்றது. ஒரு சிறந்த ஊழியர் அனுபவத்தை கட்டியெழுப்புவதும், விநய அடிப்படையிலான ஒரு கற்றல் கலாச்சாரத்தை ஊக்குவிப்பதும், எமது விழுமியங்களின் இன்றியமையாத பாகமாக விளங்ககின்ற பல்லினத்துவத்தையும் உள்ளடக்கத்தையும் கொண்டிருப்பதும் மற்றும் ஒழுக்கமான முன்மாதிரியாளர்களாக திகழ்வதும் சமத்துவத்தின் முக்கியமான பாகங்கள் என நாம் நம்பகின்றோம். ஆகையால், 2020 ஆம் ஆண்டில், குறிப்பாக கொவிட் தொற்றுநோய் நிலவரத்திலும் கூட, பல நோக்கு அணுகுமுறைகளின் ஊடாக இந்த ஆணைக்குழுவின் அறிவு பகிர்வு கலாச்சாரத்திற்கும் மற்றும் கற்றல் செயல்முறைக்கும் உதவும் முகமாக இபொபஆ அதிகமான வாய்ப்புகளை உருவாக்கியுள்ளது.




மனித வள தகவல் முறமையின் (HRIS) ஊடாக மாதாந்த செயற்பாட்டு முன்னேற்ற கண்காணிப்பு மொடியூலை தயாரித்தல் - (AP20/CP/HRD/01) (AP20/CP/IT/04)

தனிநபர் செயற்பாடுகளின் முன்னேற்றத்தை கண்காணிப்பதற்கு வினைத்திறன் வாய்ந்த பயனர்-நேயமான ஒரு முறைமை இல்லாமையானது, முன்னேற்றம் பற்றிய கண்காணிப்பு, வரவுசெலவுத்திட்டத்தின் செலவுகள் பற்றிய கண்காணிப்பு மற்றும் மேலும் முதலியன போன்ற பல அறிக்கைகளை ஆள்ரீதியில் ஊழியர்கள் மீண்டும் மீண்டும் செய்யவிருக்கும் நாளாந்த செயற்பாடுகளுக்கு ஒரு பாரிய தடையாக இருந்துள்ளது. ஆகையால், ஊழியர்கள் மீண்டும் மீண்டும் செய்ய வேண்டிய பணிகளை குறைத்து, காலத்தை சேமிக்கும் பொருட்டு ஏதாவது ஒரு குறித்த நேரத்தில், தகவல்களுக்கு இலகுவான பிரவேசத்தை வழங்குவதன் மூலம் அறிக்கைகளை தயாரிப்பதற்கு ஊழியர்களை இயலச் செய்யக் கூடிய ஒரு முறைமையை தயாரிப்பதற்கு இபொபஆ திட்டமிட்டுள்ளது. 2020 ஆம் ஆண்டில், சாத்தியவள ஆய்வும் மற்றும் முறைமை வரைவும் நிறைவு செய்யப்பட்டன.

02/2018 ஆம் இலக்க புதிய பொது நிருவாக சுற்றறிக்கைக்கு இணங்க சகல ஊழியர்களினதும் திறன்களை மேம்படுத்தும் பொருட்டு HRIS முறைமையில் ஒரு மனித வள அபிவிருத்தித் திட்டத்தை பரிணமிக்க செய்வதற்கு ஒரு கட்டமைந்த ஆற்றல் விருத்தித் தலையீடுகளின் அபிவிருத்தி - AP20/CP/HRD/02

அதற்கிணங்க ஊழியர்களின் பிந்திய கால பயிற்சி செயற்படுத்துகைக்குரிய தொடர்ச்சியான கண்காணிப்பின் மூலம் பயிற்சி சார்ந்த தேவைகளை இனங்காணும் பொருட்டு 02/2018 ஆம் இலக்க பொது நிருவாக சுற்றறிக்கையின் பிரகாரம் உரிய மாதிரிப் படிவங்கள் அடங்கலாக பிந்திய கால பயிற்சியின் பலன்களை மதிப்பிடுவதற்கும் மற்றும் ஊழியர்களின் திறன்களை கண்காணிப்பதற்கும் தேவையான முறையான ஒரு செயல்முறையை தயாரிப்பதற்கு இபொபஆ திட்டமிட்டுள்ளது. 2020 ஆம் ஆண்டில், குறித்த 02/2018 ஆம் இலக்க பொது நிருவாக சுற்றறிக்கையின் பிரகாரம், ஊழியர்களின் திறன்களை வளர்க்கின்ற சரியான கண்காணிப்பு முறைமையை உறுதிப்படுத்தும் முகமாக ஆரம்ப சாத்தியவள ஆய்வும் மற்றும் திருத்தங்களும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

ஊழியர் பதவிநிலை- பால் நிலை அடிப்படையில்



2020/12/31 இல் உள்ளவாறான ஊழியர் பதவி நிலை

பதவி	அனுமதிக்கப்பட்ட ஊழியர்	மேலதிக ஊழியர்	
		நிரந்தர	ஒப்பந்த
பணிப்பாளர் நாயகம்	01	1	-
ஆணைக்குழு செயலாளர்	01	1	-
பிரதி பணிப்பாளர் நாயகம்	01	1	-
பணிப்பாளர்	11	8	1
பிரதி பணிப்பாளர்	06	4	
உள்ளக கணக்காய்வாளர்	01	-	-
உதவி பணிப்பாளர்	17	17	-
முகாமைத்துவ உதவியாளர்	10	7	-
சாரதி / அலுவலக உதவியாளர்	04	2	1
	52	43	

பிரிவினது வழமையான கொடுப்பனவு முறையை நெறிப்படுத்தல் - AP20/CP/HRD/03

குறித்த பிரிவுடன் தொடர்புடைய கொடுப்பனவுகளின் உண்மையான செலவு விபரங்களை இற்றைப்படுத்துவதற்கான அணுகுமுறையை மேம்படுத்த இபொபஆ திட்டமிட்டுள்ளது. இந்தத் தரவுகள் கைவசமில்லாததால் பிரிவு சார்ந்த தீர்மானத்தை எடுப்பதில் தாமதம் ஏற்படுகின்றது. அது மட்டுமன்றி ஒரு மூன்றாம் தரப்பிடமிருந்து (நிதிப் பிரிவு) அந்தத் தரவுகளை சேகரிப்பதற்கு மேலதிக நேரமும் நுகரப்படுகின்றது. ஆகையால், 2020 ஆம் ஆண்டில், இபொபஆ குறித்த பிரிவின் வழமையான கொடுப்பனவு முறையை நெறிப்படுத்தியது.

நிறுவன அபிவிருத்தியும் மற்றும் சகல ஊழியர்களினதும் தொழில் வளர்ச்சியும் - AP20/CP/HRD/04

எமது மனித மூலதனத்தை பயன்படுத்துவதற்கு மிகச்சிறந்த வளர்ச்சியினதும் மற்றும் நிலைபெறுதகு தன்மையினதும் நிமித்தம் போதிய ஊக்குவிப்பு வழிகளை காண்பிப்பதன் ஊடாக ஊழியர்களின் தொழில் முன்னேற்றத்திற்கு உதவும் முகமாக நிறுவன கட்டமைப்பு தேவைப்பாடுகள், தொழிற்பாடுகள் உள்ளடங்கிய கட்டமைப்பு ஒழுங்குமுறை, தொழிற்படு தேவைப்பாடுகள் முதலியன எவ்வாறு முக்கியத்துவம் பெறுகின்றன என்பது பற்றிய மனிதவலு ஆய்வை நடத்துவதற்கு இபொபஆ திட்டமிட்டுள்ளது. அதற்கிணங்க, ஒவ்வொரு தனிநபர் நிறைவேற்று பதவியணி உறுப்பினர்களினதும் திறன்களுக்கு எதிரான வாரிசு திட்டச்சுவட்டு அட்டையையும் மற்றும் திருத்திய வரைவு நிறுவன கட்டமைப்பையும் இபொபஆ தயாரித்து நிறைவு செய்துள்ளது.

இபொபஆ இன் 2021 ஆம் ஆண்டிற்கான செயல் திட்டம்

மின்சாரம், நீர் சார்ந்த சேவைகள் மற்றும் பெற்றோலியக் கைத்தொழில்கள் ஆகியவற்றின் கேள்விகளுக்கும் மற்றும் தேவைகளுக்கும் உதவுவதற்கான செயற்பாடுகளை இபொபஆ வருடாந்தம் அணுகி திட்டமிடுகின்றது.

நாட்டினதும் மற்றும் நிறுவனத்தினதும் குறிக்கோள்கள், வெளியீடுகள் மற்றும் தேவைகள் என்பவற்றுக்கு உதவுவதற்கான கீழிருந்து மேல் வரையான ஒரு அணுகுமுறையில் செயற்பாடுகள் வரையப்பட்டுள்ளன.

ஒவ்வொரு குறிக்கோளினதும் தற்போதைய நிலைக்கும் மற்றும் எதிர்பார்த்த நிலைக்கும் இடையில் ஒவ்வொரு ஆண்டிற்கும் காணப்படும் இடைவெளி மதிப்பிடப்படுகின்றது. எதிர்பார்த்த குறிக்கோள்களை அடைந்து கொள்ளும் முகமாக செயற்பாடுகள் இனங்காணப்பட்டு அங்கீகரிக்கப்பட்டுள்ளன.

சில செயற்பாடுகள் ஒரு வருடத்திற்கும் மேலதிகமாக இழுபட்டு வருகின்றன. சில செயற்பாடுகளை ஒரு ஆண்டு காலப் பகுதியினுள் நிறைவு செய்ய முடியும்.

மின்சாரக் கைத்தொழில், பெற்றோலியக் கைத்தொழில், நீர் சார்ந்த சேவைகள் கைத்தொழில் மற்றும் வழமையான பணிகள் ஆகியவற்றின் நான்கு பிரதிபலன்களினுள் செயற்பாடுகள் வகைப்படுத்தப்பட்டுள்ளன.

2021 ஆம் ஆண்டிற்கு ஒவ்வொரு பிரிவினதும் செயற்பாடுகள் பின்வருமாறு இனங்காணப்பட்டுள்ளன.

பிரிவு	செயற்பாடு குறிப்பு இல	செயற்பாட்டு விபரம்	துறை	விளைவு இல(1-4)
TEA	AP21/CP/TEA/01	மின்சார இறுதிப் பயனர் கட்டணம் பற்றிய கொள்கை ஆலோசனை	மின்சாரம்	2
TEA	AP21/CP/TEA/02	மொத்த சேவை இணைப்புகளை வழங்குவதற்கும் இணைப்புகளை அதிகரிப்பதற்குமான வழிகாட்டல்	மின்சாரம்	2
TEA	AP21/CP/TEA/03	அனுமதிக்கப்பட்ட கட்டண முறையின் மதிப்பாய்வு	மின்சாரம்	2
TEA	AP21/CP/TEA/21	2019 ஆம் ஆண்டிற்கான அனுப்புதல் கணக்காய்வு	மின்சாரம்	2
TEA	AP21/CP/TEA/22	வழங்கப்படாத எரிசக்தி செலவை மதிப்பிடுவதற்கான ஆய்வு	மின்சாரம்	2
TEA	AP21/CP/TEA/23	இடைப்பட்ட ஆதாரங்களுக்கான கிரிட் ஒருங்கிணைப்பு வரம்பு பற்றிய ஆய்வு	மின்சாரம்	2
TEA	AP21/CP/TEA/24	விநியோகிக்கப்பட்ட உற்பத்தியுடனான கிரிட் செயல்பாடு பற்றிய ஆய்வு	மின்சாரம்	2
TEA	AP21/CP/TEA/25	பரிமாற்ற அமைப்பு பற்றிய ஆய்வு	மின்சாரம்	2
TEA	AP21/RU/TEA/31	2022 க்கான பதிவுசெய்யப்பட்ட அனுமதிக்கப்பட்ட கட்டணங்களின் மதிப்பாய்வு	மின்சாரம்	2
TEA	AP21/RU/TEA/32	சிறு விநியோகஸ்தர் கட்டண மதிப்பாய்வு	மின்சாரம்	2
TEA	AP21/RU/TEA/33	மொத்த விநியோக கட்டணம், சீரான தேசிய கட்டணம் மற்றும் இறுதி-பயனர் கட்டண மதிப்பாய்வு	மின்சாரம்	2
TEA	AP21/RU/TEA/34	தரவு மற்றும் தரவு பகுப்பாய்வு	மின்சாரம்	2
ஆராய்ச்சி			மின்சாரம்	1
COA	AP21/CP/COA/01	வழி அனுமதி பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான திருத்தப்பட்ட வழி அனுமதி வழிகாட்டல் குறித்த விழிப்புணர்வை வலுப்படுத்துதல் மற்றும் பிரதேச செயலாளர்களின் இணக்கம் பற்றிய கலந்துரையாடல்	மின்சாரம்	1
COA	AP21/CP/COA/02	ஏலம் விடப்பட்ட நிலங்களுக்கு மின்சார இணைப்பு வழங்குவதற்கான வழிகாட்டுதல்களை தயாரித்தல்	மின்சாரம்	1

COA	AP21/CP/COA/03	தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையில் நீர் வழங்கல் திட்டத்திற்கான அனர்த்த முகாமைத்துவ திட்டத்தை தயாரித்தல்	நீர்	வரையறுக்கப்பட வில்லை
COA	AP21/CP/COA/21	இலங்கை மின்சார சபையின் வாடிக்கையாளர் சேவை செயல்திறன் அளவீடு	மின்சாரம்	1
COA	AP21/CP/COA/22	நுகர்வோர் முறைப்பாடுகளை திறம்பட தீர்க்க ஒழுங்குமுறை கருவிகள் (ஒழுங்குமுறைகள், விதிகள் மற்றும் வழிகாட்டுதல்கள்) இணங்குவதை உறுதிப்படுத்த விநியோக உரிமதாரர்களுடன் உரையாடல்	மின்சாரம்	1
COA	AP21/CP/COA/23	நீர் சேவைகள் ஒழுங்குறுத்தல்	நீர்	வரையறுக்கப்பட வில்லை
COA	AP21/CP/COA/24	ஏழு மாகாணங்களின் மின்சார பயனாளர் முறைபாடுகளை தீர்க்க நடமாடும் சேவை (மேற்கு, வடமேற்கு, சப்ரகமுவ, மத்திய, வடக்கு, கிழக்கு, ஊவா)	மின்சாரம்	1
COA	AP21/RU/COA/31	தொடர்புடைய சட்டங்கள் மற்றும் வழிகாட்டுதல்களின்படி நுகர்வோர் குறைகளை எளிதாக்குதல் மற்றும் உரிமதாரர் கோரிக்கைகளுக்கு ஆலோசனை வழங்குதல்	மின்சாரம்	1
COA	AP21/RU/COA/32	மின்சார விதிகளின்படி முரண்பாடுகளை தீர்த்தல்	மின்சாரம்	1
COA	AP21/RU/COA/33	நுகர்வோர் ஆலோசனைக் குழு ஒருங்கிணைப்பு	மின்சாரம்	1
COA	AP21/RU/COA/34	லங்கா எலெக்ட்ரிசிட்டி கம்பெனி பிரைவேட் லிமிடெட்டின் வாடிக்கையாளர் சேவைகளின் செயல்திறனை அளவிடுதல்.	மின்சாரம்	1
COA	AP21/RU/COA/35	தரவு மற்றும் தரவு பகுப்பாய்வு	மின்சாரம்	1
LIC	AP/2021/LIC/CP/01	2022-41 குறைந்த செலவில் நீண்ட கால உற்பத்தி விரிவாக்கத் திட்டத்தை மதிப்பாய்வு செய்து ஒப்புதல் அளித்தல்	மின்சாரம்	1
LIC	AP/2021/LIC/CP/02	விலக்கு அளிக்கப்பட்ட தரப்பினரின் ஒழுங்குறுத்தல் கட்டமைப்பை மறுபரிசீலனை செய்வது மற்றும் திருத்துவது பற்றிய ஆலோசனை (மின்சாரம் உற்பத்தி.˙.விநியோகம் மற்றும் விநியோகம் செய்ய உரிமம் பெறுவதற்கான தேவையிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது)	மின்சாரம்	1
LIC	AP/2021/LIC/CP/21	புதிய உற்பத்தி நிலைய முன்மொழிவுகளை அங்கீகரிப்பதில் குறைந்த விலைக் கொள்கையுடன் இணங்குவது குறித்து ஆணையம் முடிவு செய்வதற்கான அளவுகோல்களைத் தீர்மானிப்பதற்கான வழிகாட்டுதல்கள் (யூ20.˙.ஊீ.˙.டுஐஊ.˙.01)	மின்சாரம்	2
LIC	AP/2021/LIC/CP/22	நீண்ட கால பரிமாற்ற மேம்பாட்டுத் திட்டத்தின் மதிப்பாய்வு மற்றும் ஒப்புதல் (AP20/CP/LIC/03)	மின்சாரம்	1
LIC	AP/2021/LIC/CP/23	அனர்த்த முகாமைத்துவ திட்டங்கள்-மின்சாரத் துறை (AP20/CP/LIC/04)	மின்சாரம்	1

LIC	AP/2021/LIC/CP/24 (20/5)	லங்கா எலெக்ட்ரிசிட்டி கம்பனி பிரைவேட் லிமிடெட்டின் மின்சாரம் (விநியோகம்) செயல்திறன் தர ஒழுங்குமுறையை (எரிசக்தி தரம் மற்றும் விநியோக தரம்) நடைமுறைப்படுத்தல்	மின்சாரம்	1
LIC	AP/2021/LIC/CP/25(20/6)	இலங்கை மின்சார சபையின் மின்சாரம் (விநியோகம்) செயல்திறன் தர ஒழுங்குமுறையை (எரிசக்தி தரம் மற்றும் விநியோக தரம்) நடைமுறைப்படுத்தல்	மின்சாரம்	1
LIC	AP/2021/LIC/CP/26(20/7)	வீதிகள் மற்றும் பொது இடங்களுக்கான விளக்குகளை வடிவமைத்தல், நிறுவுதல், இயக்குதல் மற்றும் பராமரித்தல் ஆகியவற்றுக்கான தரநிலைகளைத் தயாரித்தல் மற்றும் நிறுவன செயல்பாட்டுக் கட்டமைப்பில் கொள்கை ஆலோசனை	மின்சாரம்	1
LIC	AP/2021/LIC/CP/27(20/8)	இலங்கையில் பயன்படுத்தப்பட்ட உராய்வுநீக்கி எண்ணெயினை சேகரித்து, மறுசுழற்சி செய்து அப்புறப்படுத்துவதற்கான பொறிமுறையை தயார் செய்தல்	பெற்றோலியம்	
LIC	AP/2021/LIC/CP/28(20/9)	விநியோகக் குறியீட்டைத் திருத்துதல்	மின்சாரம்	1
LIC	AP/2021/LIC/CP/31	புதிய மின் நிலைய முன்மொழிவுகளின் மறுஆய்வு, உற்பத்தித் திட்டத்தை செயல்படுத்துவதைக் கண்காணித்தல்	மின்சாரம்	1
LIC	AP/2021/LIC/CP/32	உருவாக்கம் மற்றும் பரிமாற்ற செயல்திறன் அறிக்கைகள்	மின்சாரம்	1
LIC	AP/2021/LIC/CP/33	குறுகிய கால எரிசக்தி பாதுகாப்பு பற்றிய அறிக்கை	மின்சாரம்	1
LIC	AP/2021/LIC/CP/34	பரிமாற்ற செயல்திறன் தரநிலைகள் ஒழுங்குமுறைகளை செயல்படுத்துதல்	மின்சாரம்	1
LIC	AP2021/CP/LIC/35	உரிம விண்ணப்பங்கள் மற்றும் விலக்குகள் (புதிய விண்ணப்பங்கள், மாற்றங்கள், நீட்டிப்புகள்) மதிப்பீடு மற்றும் மானிய உரிமம் மற்றும் விலைப்பட்டியல்	மின்சாரம்	1
LIC	AP2021/CP/LIC/36	னுஊனுசீ கூட்டங்களில் எடுக்கப்பட்ட முடிவை நிறைவேற்றுதல்	மின்சாரம்	1
LIC	AP2021/CP/LIC/37	மசகு எண்ணெய் சந்தை தொடர்பான நடவடிக்கைகள்	பெற்றோலியம்	
LIC	AP2021/CP/LIC/38	LISS நிர்வாகம்	மின்சாரம்	1
LIC	AP2021/CP/LIC/39	தரவு மற்றும் தரவு பகுப்பாய்வு	மின்சாரம்	1
LIC	AP/2021/LIC/CP/40	அனுப்புதல் பகுப்பாய்வு அறிக்கைகள்	மின்சாரம்	2
INS	AP20/CP/INS/01	நுகர்வோர் அனுபவிக்கும் மின்னழுத்த ஏற்ற இறக்க சிக்கல்களை குறைப்பதற்கு ஒழுங்குமுறைகளைப் புதுப்பித்தல்	மின்சாரம்	1,3
INS	AP20/CP/INS/02	புதுப்பிக்கத்தக்க மின் உற்பத்தி நிலையங்களின் மாதிரியில் ஆய்வுகளை நடத்துதல் (உரிமதாரர்கள்)	மின்சாரம்	1,3

INS	AP20/CP/INS/03	மின்சாரம் விநியோகம் செய்வதற்கும் விநியோகிப்பதற்கும் உரிமம் பெறுவதற்கான தேவையிலிருந்து விலக்கு அளிக்கப்பட்ட தரப்பினரின் வளாகங்களில் ஆய்வுகளை நடத்துதல்	மின்சாரம்	1,3
INS	AP20/CP/INS/04	பொது மக்களுக்கு டிரான்ஸ்மி'ன் லைன் தாழ்வாரங்கள் பற்றிய தகவல்களை அணுகும் வசதியை வழங்குதல்	மின்சாரம்	1,3
INS	AP20/CP/INS/05	ஆய்வுகள் மூலம் பாதுகாப்பு ஒழுங்குமுறைக்கு இணங்குதல்	மின்சாரம்	3
INS	AP20/CP/INS/06	தேசிய முக்கியத்துவம் வாய்ந்த கட்டிடங்களில் மின் தீ அபாயங்களைக் குறைப்பதற்கான வழிகளை பகுப்பாய்வு செய்தல்	மின்சாரம்	3
INS	AP20/RU/INS/31	மின் பாதுகாப்பு தொடர்பான செயல்பாடுகளை கண்காணித்தல்	மின்சாரம்	3
INS	AP20/RU/INS/32	பொதுமக்கள் விழிப்புணர்வு நிகழ்வு	மின்சாரம்	3
INS	AP20/RU/INS/33	உரிமம் பெற்றவர்களின் மின்சார பரிமாற்றம் மற்றும் விநியோக முறை மூலம் சட்டவிரோதமாக மின்சாரம் எடுக்கும் அல்லது பயன்படுத்தும் நபர்களுக்கு எதிராக வழக்குத் தொடர மற்றும் தடைகளை விதிக்க பரிந்துரை	மின்சாரம்	1,3
INS	AP20/RU/INS/34	நுகர்வோரின் கோரிக்கையின் பேரில் அல்லது ஆணையத்தின் உத்தரவின் பேரில் ஆய்வுகள், சோதனை மின்சார இணைப்புகள் அல்லது ஆலைகள் அல்லது மின்சாரம் வழங்குதல்	மின்சாரம்	1,3
INS	AP20/RU/INS/35	மின்னியலாளர் உரிமம் வழங்கும் கட்டமைப்பு, நீர் குழாய் திருத்துனருக்கான உரிமம் வழங்கல் சாக்கெட்ஸ் மற்றும் பிளக்குகள் தரநிலைப்படுத்தல் மற்றும் பாதுகாப்பு மற்றும் தொழில்நுட்ப முகாமைத்துவ திட்டம், தயாரிப்பு நிகழ்வு அறிக்கை அமைப்பு (மருத்துவமனை) ஆகியவற்றை செயல்படுத்துதல்	மின்சாரம்	1,3
INS	AP20/RU/INS/36	மின்சார மரண ஆய்வு அறிக்கைகள்	மின்சாரம்	3
FIN	AP21/CP/FIN/01	தேவையான நிதிக் கட்டுப்பாடு மற்றும் நிதிக் கையேட்டைப் புதுப்பிக்கும் செயல்முறைகளை நெறிப்படுத்துதல்		
FIN	AP21/CP/FIN/02	கொள்முதல் நடவடிக்கைகளை ஒருங்கிணைத்தல்		
FIN	AP21/CP/FIN/03	பயன்படுத்த முடியாத பொருட்களுக்கான அளவீடு மற்றும் அப்புறப்படுத்துதல் சபை		
FIN	AP21/RU/FIN/31	வெவ்வேறு கணக்கியல் தொகுதிகள் மற்றும் கணக்கியல் தகவல் அமைப்புகளின் முழுமை மற்றும் துல்லியத்தை உறுதிப்படுத்தல		
FIN	AP21/RU/FIN/32	நிதி கண்காணிப்பு மற்றும் ஒழுங்குமுறை இணக்கம்		
FIN	AP21/RU/FIN/33	அனைத்து பற்றுச்சீட:டுகள் மற்றும் கொடுப்பனவுகளை கண்காணித்தல்		

HR	AP21/HR/CP/01	ஆணைக்குழு இணையதளத்துடன் இணைக்கப்பட்ட பொருத்தமான ஆட்சேர்ப்பு இடைமுகத்தை உருவாக்குதல்		
HR	AP21/HR/CP/02	அனைத்து வேலை விபரங்களையும் மதிப்பாய்வு செய்து புதுப்பித்தல் மற்றும் பணி விபரக் கையேட்டைத் தயாரித்தல்		
HR	AP21/HR/CP/03	நடைமுறைகள் மற்றும் கொள்கைகளுக்கு ISA சான்றிதழைப் பெறுதல்		
HR	AP21/HR/CP/04	ஆட்சேர்ப்பு திட்டத்தின் முன்னேற்றம்		
HR	AP20/HR/CP/21	மனித வள தகவல் அமைப்பு (HRIS) மூலம் மாதாந்திர செயல்பாடு முன்னேற்ற கண்காணிப்பு தொகுதி உருவாக்கம்		
HR	AP20/HR/CP/22	புதிய பொது நிர்வாக சுற்றறிக்கை 02.்.2018க்கு இணங்க அனைத்து ஊழியர்களின் திறன்களையும் மேம்படுத்துவதற்காக HRIS இல் மனித வள மேம்பாட்டுத் திட்டத்தை உருவாக்க கட்டமைக்கப்பட்ட திறன் மேம்பாட்டு தலையீடுகளை உருவாக்குதல்.		
HR	AP20/HR/CP/23	பிரிவின் வழக்கமான கட்டண முறையை நெறிப்படுத்தவும்		
HR	AP20/HR/CP/24	அனைத்து ஊழியர்களின் நிறுவன மேம்பாடு மற்றும் தொழில் வளர்ச்சி – தொடர்ச்சியான திட்டமிடல்		
HR	AP21/HR/RU/31	திறன் உருவாக்கம் மற்றும் பயிற்சி		
HR	AP21/HR/RU/32	பணியாளர் ஈடுபாடு மற்றும் நலன்		
HR	AP21/HR/RU/33	பிற வழக்கமான நிர்வாக பணி		
CCO	AP21/CP/CCO/01	மாஸ்டர் விழிப்புணர்வு பிரசாரம்	மின்சாரம்/ பெற்றோலியம்/ நீர்	3
CCO	AP21/CP/CCO/02	மேம்படுத்தப்பட்ட மசகு எண்ணெய் தரநிலைகள் மற்றும் பெட்ரோலிய அமைச்சகம், CAA மற்றும் SL சுங்கம் ஆகியவற்றுடன் புதிய சந்தை வீரர்கள் பற்றிய விழிப்புணர்வு பிரசாரம	பெற்றோலியம்	0
CCO	AP21/CP/CCO/03	செயல்பாடுகள் 2021 அடிப்படையில் விரிவான தகவல் தொடர்புத் திட்டம்	மின்சாரம்/ பெற்றோலியம்/ நீர்	3
CCO	AP21/CP/CCO/21	பயிற்சியாளர்களுக்கான பயிற்சி திட்டம் (சாரணர்களுக்கான பாதுகாப்பு தொகுதி அறிமுகம் மற்றும் பள்ளி ஆசிரியர்கள் மற்றும் அதிபர்களுக்கு பயிற்சி)	மின்சாரம்	3
CCO	AP21/CP/CCO/22	இலங்கையில் ஒழுங்குறுத்துனர்களுக்கான அறிவுத் தளம்	மின்சாரம்/ பெற்றோலியம்/ நீர்	3
CCO	AP21/CP/CCO/23	மின்சாரத் தொழில் தொடர்பான முதலீட்டு ஊக்குவிப்பு பிரசாரம் - ஆராய்ச்சி மன்றம்)-	மின்சாரம்	3

CCO	AP21/CP/CCO/24	இலங்கையில் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கான ஆற்றல்-திறனுள்ள வீடமைப்பு மாதிரி அறிமுகம், விழிப்புணர்வு மற்றும் ஊக்குவித்தல்-மொரட்டுவை பல்கலைக்கழகத்துடன் ஆராய்ச்சி மானியம் மற்றும் அறிவுப் பகிர்வு திட்டம்	மின்சாரம்	4
CCO	AP21/RU/CCO/31	சட்டரீதியான அறிவிப்புகளை வெளியிடுதல	மின்சாரம்/ பெற்றோலியம்/ நீர்	3
CCO	AP21/RU/CCO/32	வெகுஜன ஊடகங்கள், பெருநிறுவன அறிக்கைகள், ஊடக உறவுகள் மற்றும் கண்காணிப்புக்கான உள்ளடக்க மேம்பாடு -தமிழ்	மின்சாரம்/ பெற்றோலியம்/ நீர்	3
	AP21/RU/CCO/33	வெகுஜன ஊடகங்கள், பெருநிறுவன அறிக்கைகள், ஊடக உறவுகள் மற்றும் கண்காணிப்புக்கான உள்ளடக்க மேம்பாடு-சிங்களம்	மின்சாரம்/ பெற்றோலியம்/ நீர்	3
CCO	AP21/RU/CCO/34	வெகுஜன ஊடகங்கள், பெருநிறுவன அறிக்கைகள், ஊடக உறவுகள் மற்றும் கண்காணிப்புக்கான உள்ளடக்க மேம்பாடு- ஆங்கிலம்	மின்சாரம்/ பெற்றோலியம்/ நீர்	3
CCO	AP21/RU/CCO/35	டிஜிட்டல் தெரிவுநிலை மற்றும் பொதுத் தொடர்புகளை அதிகரித்தல்	மின்சாரம்/ பெற்றோலியம்/ நீர்	3
CCO	AP21/RU/CCO/36	வெகுஜன ஊடகம் மற்றும் பெருநிறுவன அறிக்கைகளுக்கான உள்ளடக்க மேம்பாடு	மின்சாரம்/ பெற்றோலியம்/ நீர்	3
CCO	AP21/RU/CCO/37	RTI மேலாண்மை	மின்சாரம்/ பெற்றோலியம்/ நீர்	3
RA	AP21/CP/RA/01	பெற்றோலியத் துறைப் பயன்பாடுகளுக்கான நிறுவனப் பேரிடர் மேலாண்மைத் திட்டங்களைத் தயாரிக்கவும்	மின்சாரம்/ பெற்றோலியம்/ நீர்	1
RA	AP21/CP/RA/02	எரிபொருள் நிரப்பும் நிலையங்களுக்கான தரநிலைகளைத் தயாரிக்கவும	பெற்றோலியம்	
RA	AP21/CP/RA/03	ஒழுங்குறுத்தல் கையேட்டைப் புதுப்பித்தல்	மின்சாரம்/ பெற்றோலியம்/ நீர்	
RA	AP21/CP/RA/21	நடுநிலை மற்றும் கீழ்நிலை இயற்கை எரிவாயு சந்தையை ஒழுங்குபடுத்துவதற்கான கட்டமைப்பை உருவாக்குதல்	பெற்றோலியம்	
RA	AP21/CP/RA/22	லூப்ரிகண்டுகளுக்கான இலங்கை தரநிலைகளை மதிப்பாய்வு செய்து புதுப்பித்தல்	பெற்றோலியம்	
RA	AP21/CP/RA/23	விநியோக சேவைகள் குறியீடு மற்றும் மின்சார நுகர்வோரின் உரிமைகள் மற்றும் கடமைகளின் அறிக்கையைப் புதுப்பித்தல்	மின்சாரம்	1
RA	AP21/CP/RA/24	அதிகரித்துவரும் போட்டித்தன்மைக்கு அமைய இறக்குமதி செய்யப்பட்ட மற்றும் உள்நாட்டில் கலக்கப்பட்ட லூப்ரிகண்டுகளின் வரிக் கட்டமைப்பு குறித்து அரசாங்கத்திற்கு ஆலோசனைகளை உருவாக்குதல்	பெற்றோலியம்	

RA	AP21/CP/RA/25	பெட்ரோல் மற்றும் டீசலில் மண்ணெண்ணெய் கலப்படத்தை கண்டறிவதற்கான நடைமுறையை உருவாக்குதல்	பெற்றோலியம்	
RA	AP21/CP/RA/26	இலங்கை தர நிர்ணய நிறுவனம் மற்றும் இலங்கை சுங்கத்தால் லூப்ரிகண்டுகளின் கட்டாய இறக்குமதி பரிசோதனைக்கான நடைமுறையை உருவாக்குதல்	பெற்றோலியம்	
RA	AP21/CP/RA/27	ஒழுங்குறுத்தல் விளைவு பகுப்பாய்வுக்கான வழிகாட்டுதல்கள்	மின்சாரம்/ பெற்றோலியம்/ நீர்	
RA	AP21/CP/RA/28	பெற்றோலிய எரிபொருளை விநியோகிக்கும் பம்புகளுக்கான தரநிலைகளையும் கண்காணிப்பதற்கான பொறிமுறையையும் உருவாக்குதல்	பெற்றோலியம்	
RA	AP21/CP/RA/29	பெட்ரோலிய எரிபொருட்களுக்கான இலங்கை தரநிலைகளை மதிப்பாய்வு செய்து புதுப்பித்தல்	பெற்றோலியம்	
RA	AP21/RU/RA/31	நிழல் மசகு எண்ணெய் மற்றும் கிரீஸ் சந்தையை ஒழுங்குறுத்தல்	பெற்றோலியம்	
RA	AP21/RU/RA/32	கீழ்நிலை பெற்றோலிய தொழில்துறையை ஒழுங்குறுத்துவது குறித்து சம்பந்தப்பட்ட அமைச்சகத்திற்கு ஆலோசனை மற்றும் உதவிகளை வழங்குதல்	பெற்றோலியம்	
EER	AP21/CP/EER/01	புதுப்பிக்கத்தக்க எரிசக்தி ஆதாரங்கள் மூலம் மின் உற்பத்திக்கான வெளிப்புற செலவை மதிப்பீடு செய்தல்	மின்சாரம்	2
EER	AP20/CP/EER/21	பயன்பாட்டு-உந்துதல் DSM திட்டங்களை செயல்படுத்துவதற்கான சாத்தியக்கூறு ஆய்வு	மின்சாரம்	2
EER	AP20/CP/EER/22	கேள்வி பிரதிபலிப்பு வாய்ப்புகள் குறித்த தொழில்நுட்ப-பொருளாதார சாத்தியக்கூறு ஆய்வு	மின்சாரம்	2
EER	AP20/CP/EER/23	புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மூலங்களிலிருந்து 80 வீத எரிசக்தியை பெறுவதற்கான தொழில்நுட்ப சாத்தியக்கூறு ஆய்வு	மின்சாரம்	2
EER	AP21/RU/EER/31	மின் உற்பத்தி நிலையங்களின் சுற்றுச்சூழல் செயல்திறன் பற்றிய தரவு சேகரிப்பு மற்றும் பரப்புதல்	மின்சாரம்	4
EER	AP21/RU/EER/32	புதுப்பிக்கத்தக்க மின் உற்பத்தியின் தரவு சேகரிப்பு மற்றும் பகுப்பாய்வு	மின்சாரம்	2
EER	AP21/RU/EER/33	லக்விஜய மின் உற்பத்தி நிலையத்தில் சுற்றுச்சூழல் செயல்திறன் மற்றும் தணிப்பு செயல் திட்டத்தை கண்காணித்தல்.	மின்சாரம்	4
IT	AP21/CP/IT/01	LISS இனை மறுசீரமைத்தல்		
IT	AP21/CP/IT/02	தொழில்நுட்ப வல்லுனர் தகவல் அமைப்பு + மொபைல் ஆப்ஸை புதுப்பித்தல்		
IT	AP21/CP/IT/03	டிஜிட்டல் ஊடக தளத்தை செயல்படுத்துதல்		

IT	AP20/CP/IT/02 (AP21/CP/IT/21)	சம்பவ அறிக்கை அமைப்பு (AP20/ CP/ IT/02)		
IT	AP20/CP/IT/03 (AP21/CP/IT/22)	உரிம முகாமைத்துவ அமைப்பு (AP20/ CP/IT/03)		
IT	AP20/CP/IT/04 (AP21/CP/IT/23)	மனிதவள மற்றும் நிதி அமைப்புகளை மேம்படுத்துதல் (AP20/CP/IT/04)		
IT	AP21/RU/IT/31	ஏற்கனவே உள்ள வணிக பயன்பாடுகளை மேம்படுத்துதல்		
IT	AP21/RU/IT/32	தரவு பகுப்பாய்வு		
IT	AP21/RU/IT/33	இன்ட்ராநெட் / எக்ஸ்ட்ராநெட்டை செயல்படுத்துதல்		
IT	AP21/RU/IT/34	தானியங்கு கொள்முதல் பணிப்பாய்வு		
IT	AP21/RU/IT/35	ஒரு உற்பத்தி திட்டமிடல் மென்பொருள் அமைப்பின் முன்மாதிரி		
IT	AP21/RU/IT/36	உள்கட்டமைப்பு மேம்பாடு		
IT	AP21/RU/IT/37	அலுவலக தன்னியக்கம்		
IT	AP21/RU/IT/38	BCP/DR + பாதுகாப்பு		
IT	AP21/RU/IT/39	பராமரிப்பு		
IT	AP21/RU/IT/40	ஆணைக்குழு கூட்டங்களை நடத்துவதற்கான தீர்வு		
		2022ஆம் ஆண்டுக்கான செயல்பாட்டுத் திட்டத்தைத் தயாரித்தல்		

2020 டிசம்பர் 31ஆம் திகதிக்கு முடிவடைந்த ஆண்டிற்கான கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை



ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE



මගේ අංකය எனது இல. My No. } ජවිඩි/ඕ/ඔයුඕ/2020/ඵඡ්ඒ/04 ඔබේ අංකය உமது இல. Your No. } දිනය திகதி Date } 2022 ජනවාරි 21 දින

தலைவர்

இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு

